**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 10-10-2012 Issued : 10-10-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, அக்டோபர் 10, 2012—தொகுதி 35—எண் 1**

**Wednesday the 10th October, 2012—Volume 35—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

## 10–10–2012

### உள்ளடக்கம்

*பக்கங்கள்*


| | | |
|---|---|---|
| | ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| | Governor and Council of Ministers | ix-xiii |
| | பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| | பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1.** | **பேரவைத் தலைவர் தேர்தல்** | 1-5 |
| **2.** | **பேரவைத் தலைவருக்குப் பாராட்டுரைகளும், நன்றியுரையும்—** | 5-37 |
| | மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 5-9 |
| | திரு. ச. இராமச்சந்திரன் | 9-11 |
| | *திரு. மு.க. ஸ்டாலின் | 11-13 |
| | *திரு. அ. சவுந்தரராசன் | 13-15 |
| | திரு. எம். ஆறுமுகம் | 15-17 |
| | திரு. எஸ். ஜாண் ஜேக்கப் | 17 |
| | முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 17-19 |
| | டாக்டர் க. கிருஷ்ணசாமி | 19-20 |
| | திரு. ரா. சரத்குமார் | 20-21 |
| | *திரு. பி.வி. கதிரவன் | 21-22 |
| | *திரு. உ. தனியரசு | 22-24 |
| | முனைவர் செ.கு. தமிழரசன் | 24-28 |

*பக்கங்கள்*

**2. பேரவைத் தலைவருக்குப் பாராட்டுரைகளும், நன்றியுரையும்—***தொடர்ச்சி*

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* 28-33

**3. அறிவிப்புகள்—** 38-39

*(அ) சட்டமன்றப் பேரவை வைர விழா தேதி மாற்றம் மற்றும் வைர விழா நினைவு வளைவு அமைத்தல்* 38

*(ஆ) பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்* 39

**4. அரசினர் தீர்மானம்—**

*பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெற்று ஒத்திவைக்கப் பெறுதல்* 39

## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் – முனைவர் கே. ரோசய்யா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| **1. முதலமைச்சர்** | .. | **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை |
| **2. நிதி அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள் |
| **3.மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு |
| **4. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல் |
| **5. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** | .. | **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் |

**6. ஊரகத் தொழில் துறை.. அமைச்சர்** — **மாண்புமிகு திரு. ப. மோகன்:**

குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**7. சமூக நலன் மற்றும் .. சத்துணவுத் திட்ட அமைச்சர்** — **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

**8. உயர் கல்வித் துறை .. அமைச்சர்** — **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

**9. வேளாண்மைத் .. துறை அமைச்சர்** — **மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**10. கூட்டுறவுத் துறை .. அமைச்சர்** — **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்



**11. வனத் துறை .. அமைச்சர்** — **மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:**

வனம்

**12. நெடுஞ்சாலை மற்றும்.. சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** — **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

**13. உணவுத் துறை .. அமைச்சர்** — **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**14. பால் வளம் மற்றும் .. பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** — **மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:**

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**15. சுற்றுச்சூழல் துறை .. அமைச்சர்** — **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

**16. பொதுப் பணித் .. துறை அமைச்சர்** — **மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

**17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:**

*கால்நடை பராமரிப்பு*

**18. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

*தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்*

**19. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:**

*கைத்தறி மற்றும் துணிநூல்*

**20. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:**

*கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்*

**21. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*

**22. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:**

*வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்*

**23. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:**

*ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*



**24. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:**

*போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்*

**25. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:**

*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*

**26. பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:**

*பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல், விளையாட்டுகள், இளைஞர் நலன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு*

**27. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:**

*தகவல் தொழில்நுட்பம்*

**28. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்*

**29. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

**30. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**31. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்ஃபு உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்

**32. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**33. வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – Dr. K. ROSAIAH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home

**2. Minister for Finance** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Finance, Planning, Legislative Assembly, Elections and Passports

**3. Minister for Electricity & Prohibition and Excise** .. **The Hon. Thiru Natham R. Viswanathan:**

Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses

**4. Minister for Municipal Administration & Rural Development** .. **The Hon. Thiru K.P. Munusamy:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

| | | |
|---|---|---|
| **6. Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru P. Mohan:**<br>Rural Industries including Cottage Industries and Small Industries |
| **7. Minister for Social Welfare and Nutritious Noon Meal Programme** | .. | **The Hon. Tmt. B. Valarmathi:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms and Nutritious Noon Meal Programme |
| **8. Minister for Higher Education** | .. | **The Hon. Thiru P. Palaniappan:**<br>Higher Education including Technical Education, Electronics, Science and Technology |
| **9. Minister for Agriculture** | .. | **The Hon. Thiru S. Damodaran:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development |
| **10. Minister for Co-operation** | .. | **The Hon. Thiru Sellur K. Raju:**<br>Co-operation, Statistics and Ex-Servicemen Welfare |
| **11. Minister for Forests** | .. | **The Hon. Thiru K.T. Patchaimal:**<br>Forests |

-



| | | |
|---|---|---|
| **12. Minister for Highways & Minor Ports** | .. | **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**<br>Highways & Minor Ports |
| **13. Minister for Food** | .. | **The Hon. Thiru R. Kamaraj:**<br>Food, Civil Supplies, Consumer Protection and Price Control |
| **14. Minister for Milk and Dairy Development** | .. | **The Hon. Thiru V. Moorthy:**<br>Milk and Dairy Development |
| **15. Minister for Environment** | .. | **The Hon. Thiru M.C. Sampath:**<br>Environment and Pollution Control |
| **16. Minister for Public Works** | .. | **The Hon. Thiru K.V. Ramalingam:**<br>Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works |
| **17. Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru T.K.M. Chinnayya:**<br>Animal Husbandry |
| **18. Minister for Industries** | .. | **The Hon. Thiru P. Thangamani:**<br>Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives |
| **19. Minister for Handlooms & Textiles** | .. | **The Hon. Dr. S. Sundararaj:**<br>Handlooms & Textiles |
| **20. Minister for Khadi and Village Industries** | .. | **The Hon. Thiru P. Chendur Pandian:**<br>Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan |

**21. Minister for Tourism ..** **The Hon. Tmt. S. Gokula Indira:**

Tourism, Tourism Development Corporation

**22. Minister for Commercial Taxes & Registration ..** **The Hon. Thiru B.V. Ramanaa:**

Commercial Taxes & Registration and Stamp Act

**23. Minister for Adi Dravidar & Tribal Welfare ..** **The Hon. Thiru N. Subramanian:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

**24. Minister for Transport ..** **The Hon. Thiru V. Senthil Balaji:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act

**25. Minister for Fisheries ..** **The Hon. Thiru K.A. Jayapal:**

Fisheries and Fisheries Development Corporation

**26. Minister for School Education and Sports & Youth Welfare, Law, Courts and Prisons ..** **The Hon. Thiru N.R. Sivapathi:**

School Education and Archaeology, Sports and Youth Welfare, Tamil Official Language and Tamil Culture, Law, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption

**27. Minister for Information Technology ..** **The Hon. Thiru N. Subramanian:**

Information Technology



**28. Minister for Information and Special Programmes Implementation ..** **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:**

Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto

**29. Minister for Labour ..** **The Hon. Thiru S.T. Chellapandian:**

Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment

**30. Minister for Health ..** **The Hon. Dr. V.S. Vijay:**

Health, Medical Education and Family Welfare

**31. Minister for Backward Classes and Minorities Welfare ..** **The Hon. Thiru A. Mohammedjan:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf

**32. Minister for Hindu Religious and Charitable Endowments ..** **The Hon. Thiru M.S.M. Anandan:**

Hindu Religious and Charitable Endowments

**33. Minister for Revenue ..** **The Hon. Thiru N.D. Venkatachalam:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

## மாற்றுத் தலைவர்கள்#

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

திரு. சு. குணசேகரன்

## செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்

---

# 29-10-2012 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

@ 29-10-2012 அன்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

| | | |
|---|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம், எம்.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ல. பத்மாவதி, பி.எஸ்சி., எஸ்.ஓ.ஜி.இ. | .. | குழு அலுவலர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |



| | | |
|---|---|---|
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. சங்கர், பி.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி கோ.மு. வனஜா, எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திரு. வே. ரவிசங்கர், பி.எஸ்சி., எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. கி. சீனிவாசன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.ஜி.எல்., சி.எல்.ஐ.எஸ். | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. ந. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ப. மனோகரன், எம்.ஏ., பி.எட்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி க. செந்தாமரை, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. விஜயகுமார், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திரு. கு. தண்டபாணி, பி.காம். | .. | செயலாளரின் தனிச் செயலர் |
| திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. சுரேஷ்குமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. பா. சுப்பிரமணியன், பி.காம்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.பில்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.பில்., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. | .. | கலசப்பாக்கம் |
| 2. | அசோக், திரு. எம்.கே. | .. | வேளச்சேரி |
| 3. | அண்ணாதுரை, திரு. இரா. | .. | மதுரை தெற்கு |
| 4. | அப்துல் ரஹீம், திரு. எஸ். | .. | ஆவடி |
| 5. | அரங்கநாதன், திரு. ஆ.க. | .. | கீழ்பெண்ணாத்தூர் |
| 6. | அருண் சுப்பிரமணியன், திரு. மு. | .. | திருத்தணி |
| 7. | அருண் பாண்டியன், திரு. செ. | .. | பேராவூரணி |
| 8. | அருள்செல்வன், திரு. ஆர். | .. | மயிலாடுதுறை |
| 9. | அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. | .. | சேலம் வடக்கு |
| 10. | அழகுவேலு, திருமதி க. | .. | கள்ளக்குறிச்சி (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. க. | .. | கும்பகோணம் |
| 13. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 14. | அன்பழகன், திரு. ஜெ. | .. | சேப்பாக்கம்—திருவல்லிக்கேணி |
| 15. | அஸ்லம் பாஷா, திரு. அ. | .. | ஆம்பூர் |
| 16. | ஆறுக்குட்டி, திரு. வி.சி. | .. | கவுண்டம்பாளையம் |
| 17. | ஆறுமுகம், திரு. எம். | .. | வால்பாறை (செ.வ.) |
| 18. | ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.. | .. | திருப்பூர் வடக்கு |
| 19. | இந்திராகாந்தி, திருமதி த. | .. | துறையூர் (செ.வ.) |

20. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்

21. இராமச்சந்திரன், திரு.ச. .. ஆலந்தூர்

22. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி

23. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு

24. இராஜி, திரு. வி.எஸ். .. செய்யூர் (செ.வ.)

25. இராஜேந்திரன், திரு. இரா. .. குறிஞ்சிப்பாடி

26. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்

27. உதயகுமார், திரு. ஆர்.பி. .. சாத்தூர்

28. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

29. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. .. எடப்பாடி

30. கடம்பூர் ராஜு, திரு. .. கோவில்பட்டி

31. கணிதா சம்பத், திருமதி எஸ். .. மதுராந்தகம் (செ.வ.)

32. கணேசன், திரு. பா. .. உத்திரமேரூர்

33. கணேஷ்குமார், திரு. அ. .. செஞ்சி

34. கதிரவன், திரு. பி.வி. .. உசிலம்பட்டி

35. கந்தன், திரு. கே.பி. .. சோழிங்கநல்லூர்

36. கருணாநிதி, திரு. மு. .. திருவாரூர்

37. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. .. அவினாசி (செ.வ.)

38. கருப்பையா, திரு. பழ. .. துறைமுகம்

39. கருப்பையா, திரு. மு.வீ. .. சோழவந்தான் (செ.வ.)

40. கலை அரசு, திரு. ம. .. அணைக்கட்டு

41. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்

42. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்



43. காமராஜ், திரு. என்.வி. .. வேதாரண்யம்

44. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

45. கார்த்திக் தொண்டைமான், திரு... புதுக்கோட்டை

46. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி

47. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)

48. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.எ. .. பர்கூர்

49. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி

50. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்

51. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செ.வ.)

52. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை

53. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)

54. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்

55. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை

56. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்

57. கோகுல இந்திரா, திருமதி எஸ். .. அண்ணா நகர்

58. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்

59. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

60. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்

61. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செ.வ.)

62. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்

63. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்

64. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்

65. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு

66. சந்திரசேகர், திரு. ஆர். .. மணப்பாறை

67. சம்பத், திரு. எம்.சி. .. கடலூர்

68. சம்பத்குமார், திரு. கோவி. .. வாணியம்பாடி

69. சம்பத்குமார், திரு. ப. .. திருச்செங்கோடு

70. சரத்குமார், திரு. ரா. .. தென்காசி

71. சவுந்தரராசன், திரு. அ. .. பெரம்பூர்

72. சாந்தி, திருமதி ஆர். .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

73. சாமி, திரு. ஆர். .. மேலூர்

74. சிவக்கொழுந்து, திரு. ப. .. பண்ருட்டி

75. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்

76. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். .. நெய்வேலி

77. சிவபதி, திரு. என்.ஆர். .. முசிறி

78. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்

79. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்

80. சின்னையா, திரு. டி.கே.எம். .. தாம்பரம்

81. சீனிவாசன், திரு. ஆர். .. ஆற்காடு

82. சுந்தரம், திரு. பி.எல். .. பவானிசாகர் (செ.வ.)

83. சுந்தரராஜ், டாக்டர் ச. .. பரமக்குடி (செ.வ.)

84. சுந்தர்ராஜன், திரு. ஆர். .. மதுரை மத்தி

85. சுபா, திருமதி ர. .. கெங்கவல்லி (செ.வ.)

86. சுப்பிரமணியன், திரு. ந. .. செய்யாறு

87. சுப்பையா, திரு. இ. .. அம்பாசமுத்திரம்

88. சுப்ரமணியன், திரு. ந. .. கந்தர்வகோட்டை (செ.வ.)



89. சுரேஷ்குமார், திரு. டி. .. செங்கம் (செ.வ.)

90. செங்குட்டுவன், திரு. டி. .. வேப்பனஹள்ளி

91. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்

92. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை

93. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்

94. செந்தில்பாலாஜி, திரு. வி. .. கரூர்

95. செந்தூர் பாண்டியன், திரு. பூ. .. கடையநல்லூர்

96. செல்லப்பாண்டியன், திரு. சி.த. .. தூத்துக்குடி

97. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு

98. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

99. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு

100. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

101. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)

102. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி

103. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்

104. சோழன் சித. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி

105. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி

106. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)

107. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்

108. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி

109. தங்கவேலன், திரு. சுப. .. திருவாடனை

110. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு

111. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு

112. தமிழரசன், முனைவர் செ.கு. .. கீழ்வைத்தினான்குப்பம் (செ.வ.)
113. தமிழழகன், திரு. க. .. திட்டக்குடி (செ.வ.)
114. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செ.வ.)
115. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி
116. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செ.வ.)
117. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்
118. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்
119. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
120. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)
121. தினகரன், திரு. க. .. சூலூர்
122. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்
123. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு
124. துரைமுருகன், திரு. .. காட்பாடி
125. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
126. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்
127. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. காங்கேயம்
128. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்
129. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
130. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செ.வ.)
131. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்
132. நாகைமாலி, திரு. வீ.பி. .. கீழ்வேளூர் (செ.வ.)
133. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்
134. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி



135. நாராயணன், திரு. பி.ஜி. .. பவானி
136. நீலகண்டன், திரு. வ. .. திரு.வி.க. நகர் (செ.வ.)
137. பச்சைமால், திரு. கே.டி. .. கன்னியாகுமரி
138. பரஞ்ஜோதி, திரு. மு. .. திருச்சிராப்பள்ளி மேற்கு
139. பரமசிவம், திரு. கே.பி. .. பல்லடம்
140. பவுன்ராஜ், திரு. சு. .. பூம்புகார்
141. பழனிசாமி, திரு. கே.சி. .. அரவக்குறிச்சி
142. பழனிச்சாமி, திரு. ச. .. வேடசந்தூர்
143. பழனியப்பன், திரு. பி. .. பாப்பிரெட்டிப்பட்டி
144. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்
145. பாண்டியராஜன், திரு. க. .. விருதுநகர்
146. பாபு முருகவேல், திரு. ர.ம. .. ஆரணி
147. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
148. பார்த்தசாரதி, திரு. ப. .. விருகம்பாக்கம்
149. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். .. மேட்டூர்
150. பாலகிருஷ்ணன், திரு. க. .. சிதம்பரம்
151. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்
152. பாஸ்கர், திரு. அ. .. தருமபுரி
153. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்
154. பிரபாகர், திரு. ஜே.சி.டி. .. வில்லிவாக்கம்
155. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்
156. பீம்ராவ், திரு. க. .. மதுரவாயல்
157. புத்திசந்திரன், திரு. .. உதகமண்டலம்

158. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்

159. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்

160. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

162. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

163. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ஆ.வா.)

164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை

165. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)

166. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)

167. போஸ், திரு. ஏ.கே. .. மதுரை வடக்கு

168. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)

169. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்

170. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு

171. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

172. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்

173. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்

174. மனோரஞ்சிதம், திருமதி .. ஊத்தங்கரை (செ.வ.)

175. மாதேஸ்வரன், திரு. சு. .. ஆத்தூர் (செ.வ.)

176. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்

177. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி

178. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்



179. முத்துசெல்வி, திருமதி ச. .. சங்கரன்கோவில் (செ.வ.)

180. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

181. முருகன், திரு. மு. .. முதுகுளத்தூர்

182. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

183. முருகேசன், திரு. து. .. செங்கல்பட்டு

184. முனுசாமி, திரு. கே.பி. .. கிருஷ்ணகிரி

185. முஹம்மத்ஜான், திரு. அ. .. இராணிப்பேட்டை

186. மூர்த்தி, திரு. வி. .. மாதவரம்

187. மைக்கேல் ராயப்பன், திரு. சி. .. ராதாபுரம்

188. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

189. மோகன், திரு. ப. .. சங்கராபுரம்

190. ரமணா, திரு. பி.வி. .. திருவள்ளூர்

191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. அந்தியூர்

192. ரமேஷ், திரு. கா.கோ. .. திருப்பத்தூர்

193. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

194. ராமசாமி, திரு. ஆ. .. நிலக்கோட்டை (செ.வ.)

195. ராமச்சந்திரன், திரு. கா. .. குன்னூர்

196. ராமமூர்த்தி, திரு. ஆர். .. விக்கிரவாண்டி

197. ராஜநாயகம், திரு. மு. .. அறந்தாங்கி

198. ராஜலட்சுமி, திருமதி ஆர். .. மயிலாப்பூர்

199. ராஜா, திரு. ஏ.கே.டி. .. திருப்பரங்குன்றம்

200. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

201. ராஜா, திரு. பொன். .. பொன்னேரி (செ.வ.)
202. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி
203. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்
204. ரெங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
205. ரெத்தினசாமி, திரு. மு. .. திருவையாறு
206. லாசர், திரு. ஏ. .. பெரியகுளம் (செ.வ.)
207. லிங்கமுத்து, திரு. கு. .. குடியாத்தம் (செ.வ.)
208. வளர்மதி, திருமதி பா. .. ஆயிரம் விளக்கு
209. விஜயகாந்த், திரு. .. ரிஷிவந்தியம்
210. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு
211. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை
212. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. .. சங்கரி
213. விஜய், டாக்டர் வி.எஸ். .. வேலூர்
214. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை
215. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை
216. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு
217. வெங்கடேசன், திரு. எல். .. திருக்கோவிலூர்
218. வெற்றிவேல், திரு. பு. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
219. வேணுகோபாலு, திரு. கேஎஸ்.என். .. பழனி
220. வேதாச்சலம், திரு. எஸ். .. அம்பத்தூர்
221. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை
222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்



223. வைகைச்செல்வன், முனைவர் .. அருப்புக்கோட்டை
224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
225. வைரமுத்து, திரு. பி.கே. .. திருமயம்
226. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. இராமநாதபுரம்
227. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்
228. ஜானகிராமன், திரு. ஐ. .. வானூர் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
230. ஜெயசுதா, திருமதி எல். .. போளூர்
231. ஜெயபால், திரு. கே.ஏ. .. நாகப்பட்டினம்
232. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஸ்ரீரங்கம்
233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்
234. ஹரிதாஸ், டாக்டர் த. .. திண்டிவனம் (செ.வ.)
235. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி) .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஏ. நவநீதகிருஷ்ணன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043—புரட்டாசி 24

## 2012 அக்டோபர் 10, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்* **முனைவர் செ.கு. தமிழரசன்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:**

"இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு"

எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி, தேவையானதைக் கொடுத்து, உதவி செய்யும் ஆட்சியாளருக்குப் புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல் குடிமக்களும் அமைவார்கள்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. பேரவைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:** ஒரு எளிய குடும்பத்தைச் சார்ந்த, எளிய இயக்கத்தைச் சார்ந்த, எளிய சமூகத்தைச் சார்ந்த, எளியவனான என்னை இரண்டாவது முறையாக தற்காலிகப் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்க வைத்திருக்கிற, அந்த வாய்ப்பை உருவாக்கிய போற்றுதலுக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றிகளைப் பதிவு செய்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 178—வது பிரிவின்கீழ், பேரவைத் தலைவரைத் தேர்ந்தெடுக்க நடைபெறும் தேர்தல் ஆகும். பேரவைத் தலைவர்

தேர்தலுக்காக, *9–10–2012* ஆம் நாள் நண்பகல் *12–00* மணி வரை ஒரு வேட்புத்தாள் மட்டுமே பேரவைச் செயலாளரால் பெறப்பட்டிருக்கிறது.

சட்டமன்றப் பேரவை விதி *7*, உள்விதி *4*–ன்படி பேரவைத் தலைவர் பதவிக்கு முறைப்படி நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:

| | | |
|---|---|---|
| நியமனம் செய்யப்பெற்றவர் | : | திரு. ப. தனபால் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) |
| முன்மொழிந்தவர் | : | மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பேரவை முன்னவர் அவர்கள். |
| வழிமொழிந்தவர் | : | மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். |

பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. ப. தனபால் அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டு, வேட்புத்தாள் பெறப்பட்டுள்ளதால், திரு. ப. தனபால் அவர்கள், இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்துடன் எனது அலுவல் முடிவடைந்தது.

இப்பொழுது பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களுக்கு உளமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவின் இரும்பு மங்கையாக, எதிர்கால இந்தியாவை நிர்மாணிக்கப் போகிற (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்றப் பேரவை



வைர விழா கண்டு கொண்டிருக்கிற இந்தத் தருணத்தில், ஒடுக்கப்பட்ட மக்களின் உள்ளங்களில் எல்லாம் என்றென்றைக்கும் விலை மதிக்க முடியாத வைரமாகத் திகழ்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் இந்தச் சமூகத்தின் கடைக்கோடியிலே இருக்கிற, கடைக்கோடி சமூகத்திலே இருந்து வந்திருக்கிற திரு. ப. தனபால் அவர்களை இந்தப் பேரவையின் உயர் பதவியான தலைவர் பதவிக்கு நியமித்து தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பளித்திருக்கிறார் என்கிறபோது ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பில் எங்கள் உளப்பூர்வமான நன்றிகளை இந்தச் சந்தர்ப்பத்திலே உரித்தாக்கிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த இருக்கையிலிருந்து நான் அதிகம் பேச முடியாது என்பதனால் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். கௌதம புத்தரைப் பார்த்து அவருடைய சீடர்கள் கேட்டார்கள், “உலகத்திலேயே உயரமானது எது” என்று. புத்தர் சிரித்துக் கொண்டே சொன்னார், “பள்ளத்திலே இருக்கிறவனைக் கைதூக்கி விடுவதற்குக் குனிபவன் இருக்கிறானே, அவன்தான் உலகத்திலேயே உயரமானவன்” என்று. (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளத்திலே இருக்கிற ஒரு சமூகத்தை, *60* ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, இன்றைக்குத் தமிழகத்தின் சட்டமன்றப் பேரவைத் தலைவர் பதவிக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாறு இருக்கிறவரை, தமிழகத்தின் சட்டமன்ற வரலாறு இருக்கிறவரை, மிக உயரமானவர் என்கிற அந்த உச்சகட்டத்தை இன்றைக்குப் பெற்றிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–05*

தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற பேரவைத் தலைவரை, பேரவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் அழைத்து வந்து, பேரவைத் தலைவரது இருக்கையில் அமரச் செய்வது மரபாகும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், தேசிய முற்போக்கு திராவிட கழக சட்டமன்றக் கட்சியின் துணைத் தலைவர் அவர்களும் அழைத்து வந்து, பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[தற்காலிகப் பேரவைத் தலைவர்] [2012 அக்டோபர் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இருக்கையில் அமருவதற்குச் செல்லும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவர்களது இருக்கையில் அமர்ந்த பின்னரே அமர்தல் வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*(பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்களும், அழைத்து வந்து பேரவைத் தலைவரின் இருக்கையில் அமரச் செய்தார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், தமிழகத்தில் இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என, பார் புகழும் இலட்சியத்தை அறிவித்த தாயே! பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் வாழும் தாயே!

மணமிக்க வாச மலரை யார் தடுத்து மறைத்தாலும் மணம் வீச மறுப்பதில்லை! ஆம், அம்மாவின் புகழை, யார் தடுத்து மறைத்தாலும், மறைக்க முடியாது, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மறைக்கவே முடியாது.

இணக்கமும், இனிமையும் இதயத்தில் ஏந்தியோர் எதிரியால் தோற்பதில்லை! ஆம், எங்கள் அன்னைக்கு என்றைக்கும் வெற்றிதான். (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி மேல் வெற்றிதான். எந்நாளும் நம் அன்னைக்கு வெற்றி முகந்தான். வணக்கத்தை உரைக்கத்தான் துடிக்கிறேன். அன்னையே, வார்த்தைகள் வரவேயில்லை!

அரியணை ஏற்றதும் ஏற்றமிகு திட்டங்களைத் தந்த தாயே! அனைவரும் போற்றிடும் சட்டங்களால் வியக்க வைத்த தாயே! அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற தாயே! உங்களை வணங்குகின்றேன் தாயே!

கதறிய ஈழத் தமிழர்க்கு கரம் கொடுத்த தாயே! சிதறிய தமிழினத்தை ஒன்று சேர்த்த தாயே! உலகத் தமிழர்களின் உள்ளங்களில் என்றென்றும் உளப்பூர்வமான நடவடிக்கைகளினால் உயர்வாக வாழும் தாயே! உங்களை வணங்குகின்றேன் தாயே!



2012 அக்டோபர் 10] [பேரவைத் தலைவர்]

உங்கள் பாதையில் எத்தனையோ புயல்கள், "தானே" புயலையே, தள்ளாட வைத்தவர் அல்லவா நீங்கள்? (மேசையைத் தட்டும் ஒலி)

உங்கள் பயணத்தில் எத்தனையோ தடைகள், தடைகளையே படிக் கற்களாக்கியவர் அல்லவா நீங்கள்? ஓராண்டு ஆட்சியில், நூறாண்டு சாதனை படைத்து சரித்திரத்தைப் பதிவு செய்த தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் விடியலுக்காக உழைத்து தொலைநோக்குத் திட்டங்கள் தந்த தாயே! உங்களை வணங்குகிறேன் தாயே!

கருவிலே உயிர் கொடுத்தவர் என்னைப் பெற்ற தாய், பொது வாழ்விலே உயிர் கொடுத்தவர் இதய தெய்வம் எங்கள் புரட்சித் தலைவி என்னும் தூய தாய், உங்களை வணங்குகிறேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

"யார் தருவார் இந்த அரியாசனம்?"; எங்கள் அன்னை எனக்குத் தந்தார்! (மேசையைத் தட்டும் ஒலி) எளியேனுக்கு இந்த அரியாசனம் தந்தார். ஏற்றம் தந்தார்! ஏற்றம் தந்து, என் வாழ்வில் மாற்றம் தந்தார்.

என் அன்னையை வணங்குகிறேன், என் அன்னையை வணங்குகிறேன். என் அன்னையைத் தாள்பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–10*

## 2. பேரவைத் தலைவருக்குப் பாராட்டுரைகளும் நன்றியுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை தன்னுடைய உயிர்மூச்சாகக் கொண்டு இயங்குகின்ற ஒன்றரைக் கோடி தொண்டர்களில் ஒருவனான என்னை பாரம்பரியம் மிக்க இந்த அவையில் பங்கேற்கும்படி, சட்டமன்ற உறுப்பினராக்கி, நிதி அமைச்சராக்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை

அழைத்துச் சென்று பேரவைத் தலைவருக்கான இருக்கையிலே அமரச் செய்திடும் அவை முன்னவர் என்னும் மகத்தான பொறுப்பை எனக்கு நல்கி, எளிய தொண்டனுக்கும் பெருமை சேர்க்கும் எங்களது இணையற்ற தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழின் வளம் காத்து, தமிழர் நலம் காக்கும் தங்கத் தாரகை, இன்னல்களை வேரறுத்து, இன மானம்தனைக் காக்கும் வீராங்கனை, தடைகளைத் தகர்த்து தமிழர் உரிமை காக்கும் தனிப் பெரும் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) புது யுகத்தின் சின்னம், பொது நலத்தின் சிகரம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தையும் (மேசையைத் தட்டும் ஒலி) என்றும் மாறாத நன்றியையும் முதற்கண் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பும் பாரம்பரியப் பெருமையும் மிக்க இந்த அவையின் பேரவைத் தலைவராக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள்.

> "கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
> உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி"

என்னும் குறளுக்கு இலக்கணமாய்த் திகழ்பவர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நூறாண்டு பேசும் சாதனைகளை ஓராண்டில் முடித்து உலகு வியக்க நல்லாட்சி நடத்திவரும் இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், எதனை, எதனால், எவர் முடிப்பர் என்று ஆய்ந்து, அதனை சிறப்புடன் செயல்படுத்தும்வண்ணம் தங்களைப் பேரவைத் தலைவராகத் தேர்வு செய்து இந்த இருக்கையில் அமரச் செய்துள்ளார்கள் என்று எண்ணும்போது பெருமையால் உள்ளம் பூரிக்கின்றது.

தாழ்த்தப்பட்ட மக்களை தம்முடைய இதயத்தில் ஏந்தி, சமூக நீதி காக்கும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) சரித்திரத் தலைவி நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஒடுக்கப்பட்ட மக்கள் நலிவு



நீங்கி பொலிவு பெற திட்டமிட்டுச் செயலாற்றும் சாதனைத் தலைவி நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவராகத் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதே இந்த உண்மையை உலகுக்கு எடுத்துச் சொல்லும். தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவர் சட்டமன்றப் பேரவைத் தலைவராக இல்லையே என்று அரை நூற்றாண்டுக் காலம் இருந்த குறையை இன்று நமது அம்மா அவர்கள் நீக்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் 50 ஆண்டுக் கால கனவை மாண்புமிகு அம்மா அவர்கள் இன்று நனவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்ட இப்பேரவையின் தலைவர்களாக இருந்து மிகச் சிறப்பான முறையில் பணியாற்றி, சட்டமன்ற ஜனநாயகத்திற்குப் பெருமை சேர்த்த பல தலைவர்களின் வரிசையிலே இணைந்து, அவர்கள் அமர்ந்து அலங்கரித்த இந்த இருக்கையிலே தாங்கள் அமர்ந்து இந்த அவையை நடத்த இருப்பது உண்மையிலேயே பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரியது ஆகும்.

இந்த மாமன்றத்தை சிறப்புடன் நடத்திச் செல்வதில் இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. ஒன்று கடினமான பக்கம். இன்னொன்று இனிமையான பக்கம். இந்த அவையிலே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் திருப்திப்படுத்த முடியாது. ஆனால், திருப்திப்படுத்த வேண்டும். எல்லோருக்கும் அவர்கள் விரும்புகின்ற வகையில் பேசுகின்ற, உரை நிகழ்த்துகிற வாய்ப்பினை அளிக்க முடியாது. ஆனாலும் அவர்கள் விரும்புகிற வாய்ப்பினை அவர்களுக்கு வழங்க வேண்டும். அதுதான் கடினமான பக்கம்.

இன்னொரு பக்கம் என்பது இனிமையான பக்கம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது பேராதரவு தங்களுக்கு இருக்கிறது என்பதுதான் அந்த இனிமையான பக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த இனிமையான பக்கம், முதலில் சொன்ன கடினமான பக்கத்தைச் சமாளிக்கின்ற வலிமையைத் தங்களுக்கு வழங்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–15*

புரட்சித் தலைவி அம்மா அவர்களது பேராதரவால் அவையை நடத்திச் செல்வது என்பது தங்களுக்கு மிகவும் எளிதானதாக அமையும். எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த அவையில் உரையாற்ற சம வாய்ப்பு பெற்றுத் தருகிற மாண்புமிகு அம்மா அவர்களின் மாண்பு சட்டமன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டுகின்ற குறைபாடுகளையும், கோரிக்கைகளையும் ஆய்ந்து உடனடியாக அவற்றைத் தீர்த்து வைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் பெருந்தன்மை; எதிர்க்கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது தவறு எனில், உடனுக்குடன் கருத்துக்கு கருத்து பதில் அளிக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் பாங்கு; ஆக்கபூர்வமான சிறப்பான கருத்துகளை எடுத்துக் கூறுவோரை உடனடியாகப் பாராட்டுகின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் உயர்ந்த எண்ணம்; பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் கூறிய, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தை, தான் கடைப்பிடிப்பதோடு மட்டுமல்லாமல், ஏனைய கழக உறுப்பினர்களையும் கடைப்பிடிக்க வைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் சான்றாண்மை; இத்தனைச் சிறப்புகளையும் ஒருங்கே கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது சீர்மிகு நல்லாட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், இந்த அவையை நடத்துகின்ற தங்களது பணியையும், பொறுப்பையும் மிகவும் சிறப்பாகவும், எளிதாகவும் தாங்கள் நிறைவேற்ற முடியும் என்பதில் எங்களுக்குச் சிறிதும் ஐயம் இல்லை.

இந்த அவைக்கென்று இருக்கின்ற ஜனநாயக மரபுகளையும், விதிமுறைகளையும், கண்ணியத்தினையும் கட்டிக்காத்து, அவற்றை மீறாமல் பேரவையைச் செம்மையாக நடத்த வேண்டிய மிகப் பெரிய கடமையைச் சிறப்புடன் செயலாற்றி, தமிழ்நாட்டிற்கும், தமிழ் சமுதாயத்திற்கும், நம்மையெல்லாம் இந்த அளவுக்கு உயர்த்தியுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், பெருமை சேர்க்க வேண்டும் என்ற எனது விருப்பத்தினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.





தங்களது பணி சிறக்க, மேன்மை பெற எனது இதயபூர்வமான நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களை இருக்கையில் அமர்த்துகின்ற வாய்ப்பினை பெற்றதற்காக, தங்களை நீண்ட காலம் அறிந்தவன் என்பதனால் பெருமையடைகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

சபாநாயகர் என்கிற பதவிக்கு வேண்டுமானால் நீங்கள் புதியவராக இருக்கலாம். ஆனால் சபையை நடத்திச் செல்லும் பணிக்கு நீங்கள் மிகவும் பழையவர் என்பதை நாங்கள் அறிவோம். ஏற்கெனவே இந்த மன்றத்தில் துணை சபாநாயகராக இருந்து இம்மன்றத்தை நடத்தியிருக்கிறீர்கள். நல்ல அனுபவம் உண்டு, ஆற்றல் உண்டு. மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது அவர்களை எவ்வாறு கையாள வேண்டும் என்கின்ற திறமையை நாங்கள் கண்கூடாகப் பார்த்திருக்கின்றோம். ஆகவே, தாங்கள் இந்தப் பொறுப்பிற்கு வந்திருப்பது தங்களுடைய திறமைக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற வாய்ப்பு என்று கருதி மனமாரப் பாராட்டுகின்றேன்.

திறமைகள் இருந்தால் மட்டுமே வாய்ப்புகள் கிடைத்துவிடுவதில்லை. அதுவும் குறிப்பாக, சமுதாயத்திலே ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் திறமைகளைப் பெற்றிருந்தாலும்கூட அவர்களுக்கு வாய்ப்பு கிடைப்பதில்லை. ஆனால், இந்தச் சமுதாயத்திலே அனைவருக்கும் வாய்ப்பு வரும், சம வாய்ப்பு கிடைக்கும் என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில் தாங்கள் ஆளுங்கட்சியின் சார்பிலே சட்டப் பேரவைத் தலைவராக நியமனம் செய்யப்பட்டிருப்பதற்கு உண்மையிலேயே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வாய்ப்பு தந்ததற்காக வாழ்த்துகின்றேன். தகுதியுடைய தாங்கள் இந்தப் பதவிக்கு வந்திருப்பது தங்களுடைய தகுதியின் பொருட்டே என்று நான் கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பது ‘பொன்மலர் மணமும் பெற்றார்போல’ தாங்கள் ஏற்கெனவே பெற்றிருக்கின்ற தகுதியோடு அதுவும் சேர்ந்திருக்கிறது. அந்த வகையிலே சிறப்புக்குரியது என்று நான் கருதுகின்றேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [2012 அக்டோபர் 10

இராயபுரம் தொகுதி இழந்தது, ராசிபுரம் தொகுதி அதைப் பெற்றுக்கொண்டது. ஒருவேளை ராசிபுரம் தொகுதி என்பதனால் அதற்கு ராசி இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. அந்த ராசிபுரம் தொகுதியைச் சேர்ந்த தாங்கள் இன்றைக்கு எங்களையெல்லாம் வழிநடத்திச் செல்லக்கூடிய சபாநாயகராக வந்திருக்கிறீர்கள்.

இந்த நாடு சுதந்திரம் பெற்ற நேரத்திலே, திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் இங்கே இருந்தார்கள். அதற்குப் பிறகு அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த தாங்கள் வந்திருக்கிறீர்கள் என்று கருதுகின்றபோது பெருமையும் பூரிப்பும் நாங்கள் அடைகின்றோம்.

*முற்பகல் 10–20*

பொதுவாக நம்முடைய அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் சமவாய்ப்பு அளிப்பதை இந்தச் சட்டப் பேரவை வரலாறாகக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

> "கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
> உரிமை உடைத்துஇவ் வுலகு"

என்று திருவள்ளுவர் அழகாகக் குறிப்பிடுகிறார். கடமையை நாம் செய்கின்றபோது, கருணை காட்ட வேண்டி வந்தால் கருணையும் காட்ட வேண்டும்; ஆனால், அந்தக் கருணை, கடமையைச் சிதைக்காமல் இருக்க வேண்டும் என்று திருவள்ளுவர் சொல்கிறார். ஆகவே, தாங்கள் தங்களுடைய கடமையை ஆற்றுகிறபொழுது கருணை காட்ட வேண்டிய நேரம் வந்தால், அதுவும் குறிப்பாக எதிர்க்கட்சியிலே சேர்ந்திருக்கிற எங்களுக்கு நீங்கள் கருணை காட்ட தவறமாட்டீர்கள் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசத்தான் முடியும். ஆளும் தரப்பில் இருக்கின்றவர்கள் பேசவும் முடியும், செய்யவும் முடியும். இரண்டு ஆதாயங்களையும் ஆளும் தரப்பிலே இருக்கின்றவர்கள் பெற்றிருக்கின்றார்கள். எங்களைப் பொறுத்தவரை பேசத்தான் முடியுமே தவிர, செய்ய முடியாது. பேசுவதற்கு என்று இருக்கின்ற ஒரே மன்றம் இந்தச் சட்டப் பேரவைதான். ஆகவே, பேசுவதற்கான வாய்ப்பை நிச்சயம் நீங்கள் எங்களுக்குத் தாராளமாக வழங்குவீர்கள் என்கிற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. எங்களுடைய இயக்கத்தைப்



2012 அக்டோபர் 10] [திரு. ச. இராமச்சந்திரன்]

பொறுத்தவரையிலே தங்களுக்கு முழு ஒத்துழைப்பைத் தருவோம். இந்த தமிழ்நாடு சட்டமன்றம், பல புகழ்மிக்க சட்டமன்ற சபாநாயகர்களைக் கொண்டது. அதற்கெனத் தனி மதிப்பு, தனி வரலாறு உண்டு. அந்த வரலாற்றை நீங்கள் மேலும் மேலும் செம்மைப்படுத்துகின்ற வகையிலே உங்களுடைய பணி சிறக்க வேண்டுமென்று வாழ்த்தி அமர்கின்றேன் நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதினான்காவது சட்டப் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய உங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், வாழ்த்தி வரவேற்பதில் மனமகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் இந்தப் பேரவைக்குப் புதியவர் அல்லர். இந்தப் பேரவையில் தேவையான அனுபவத்தைப் பெற்றிருக்கக்கூடியவர்கள் நீங்கள். அதுமட்டுமல்ல; தாங்கள் பெற்ற உயர் கல்வியின்மூலம் அறிவாற்றலைப் பெற்றிருக்கக்கூடியவர்கள் நீங்கள். எனவே, இந்தப் பேரவையை வழிநடத்திச் செல்வதற்குத் தேவையான அனுபவத்தையும், அறிவாற்றலையும், அவற்றின் வாயிலாக உயர்ந்த அணுகுமுறையினையும் நீங்கள் கைவரப் பெற்றிருப்பதாகவே நாங்கள் பெரிதும் நம்பி எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

நீங்கள் அருந்ததியர் சமுதாயத்தின் பிரதிநிதியாக வாய்த்திருப்பது உங்களுக்கு மட்டுமல்ல, இந்தப் பேரவைக்கும் கூடுதல் பெருமையாகும். அருந்ததியர் சமுதாயம், அழுத்தப்பட்ட சமுதாயம் மட்டுமல்ல; எங்களின் உணர்வுகளில் ஆழப் பதிந்திருக்கக்கூடிய சமுதாயமும் ஆகும்.

தலித் சமுதாயம் தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் ஆசனத்தை அலங்கரிப்பது என்பது தந்தை பெரியாரின் தமிழ் மண்ணுக்கு மதிப்புக் கூட்டிடும் ஒரு நிகழ்வாக அமைந்திருக்கிறது. தலித் சமுதாயத்தைச் சார்ந்திருக்கக்கூடிய ஒருவர், முதல் முறையாக இதே பேரவையின் தலைவராக 1946 முதல் 1955 வரை ஒன்பது ஆண்டுகள், திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் இந்தப் பதவியிலே அமர்ந்து வெகு சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள் என்பது வரலாற்றுப் பதிவாக அமைந்திருக்கிறது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2012 அக்டோபர் 10

திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள், அண்ணல் காந்தியடிகள், பெருந்தலைவர் காமராஜர், மூதறிஞர் ராஜாஜி, தியாகி சத்தியமூர்த்தி, திரு. சி. சுப்ரமணியம் போன்ற பெரியவர்களால் பாராட்டப்பட்டவர். திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள், தலித் சமுதாயத்திலிருந்து வந்த முதல் பேரவைத் தலைவராக மட்டுமல்ல; சென்னை மாநகரத்தினுடைய முதல் மேயராகவும் இருந்திருக்கிறார். திரு. சிவசண்முகம் பிள்ளை, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்குப் பொருளாதாரச் சுதந்திரம் பெற்றுத் தருவதற்காக வலிமையாக வாதாடியவர். மன்றங்களில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் மட்டும் தாழ்த்தப்பட்டோருக்கு முன்னேற்றத்தைத் தந்துவிடாது. மற்ற சமுதாய மக்களிடம் மனமாற்றம் ஏற்பட்டால்தான், தாழ்த்தப்பட்டோர் தடையேதுமின்றி முன்னேற முடியும் என்ற எண்ணத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டு அயராது பாடுபட்டவர் அவர்.

சீலம் மிகுந்த பன்முகப் பேராற்றல் கொண்ட திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள், பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள உங்களுக்கு முன்னோடியாக மட்டுமல்ல முன்மாதிரியாகவும் அமைந்து, உங்களது நடவடிக்கைகளுக்கு நல்ல வழிகாட்டியாக இருந்திட வேண்டுமென்று நாங்கள் ஆசைப்படுகிறோம்.

சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளில் எதிர்க்கட்சிகளின் உரிமை எந்த அளவுக்குப் பாதுகாக்கப்படுகிறது; கருத்துகளை வெளிப்படுத்த எந்த அளவுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன என்பதை வைத்துத்தான் சட்டமன்றப் பேரவை ஜனநாயகத்தின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆளுங்கட்சியே அனைத்தும்; 'எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்' என எல்லாமே ஆளும் கட்சிதான் என்று எண்ணுவதும், நடப்பதும் ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு அடிப்படை ஆகாது; அந்த மாதிரியான நோக்கும், போக்கும் சர்வாதிகாரத்திற்கே இட்டுச் சென்றுவிடும் என்ற பேராபத்தை உணர்ந்து நடந்து கொள்வதே, நாளைய சமுதாயத்தின் பழிச் சொல்லுக்கு ஆளாகாமல் இருப்பதற்கான பண்பட்ட வழியாகும். இந்தப் பயமும், நேர்மையும் நம் எல்லோரது உள்ளங்களிலேயும் நிலைத்திருந்தால்தான், ஜனநாயகச் சோதனையில் ஈடுபட்டிருக்கக்கூடிய நாம், சரித்திரம் போற்றும் சாதனைகளை நிகழ்த்திக் காட்டிட முடியும்.



2012 அக்டோபர் 10] [திரு. மு.க. ஸ்டாலின்]

*முற்பகல் 10–25*

ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இருக்கக்கூடிய உறவு, மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ளைத் தோழர்களுக்கும் உள்ள உறவு போல இருக்க வேண்டுமென்று சொன்னார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். நம் கையில் கட்டை விரல், ஆள்காட்டி விரல், நடு விரல், மோதிர விரல், சுண்டு விரல் என்று தனித்தனியாக இருப்பதைப் போல, பல கட்சிகள் ஆளும் கட்சி என்றும், எதிர்க்கட்சிகள் என்று இருந்தாலும், அந்தக் கட்சிகள் எல்லாம் நாட்டு நலன் என்ற ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். 'தனித்தனியே இருக்கும் விரல்கள் எதைச் செய்தாலும் ஒன்று சேர்வதைப் போல' என்று அழகான உவமையோடு சுட்டிக்காட்டினார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்.

'பூனை, தனது குட்டியைக் கவ்வி எடுத்துச் செல்வதைப் போல ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியை நடத்த வேண்டுமே அன்றி, பூனை எலியைக் கவ்விக் கொண்டு செல்வதைப் போல இருக்கக் கூடாது' என்று விளக்கியவர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள். ஆளுங்கட்சியோடு எதிர்க்கட்சிகளும் இருந்து இணைந்து நடத்துவதுதான் ஜனநாயகத்தின் அடிப்படை இலக்கணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் உங்கள் பொறுப்பினை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குவதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தயாராகவே இருக்கிறது என்ற உறுதியினை உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்து, உங்களை மீண்டும் ஒரு முறை வரவேற்று, வாழ்த்தி, இந்த இனிய வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களைத் தமிழகம் துணை சபாநாயகராகவும், அமைச்சராகவும் பார்த்துப் பழக்கப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தில் துணைத் தலைவராக தாங்கள் ஆற்றிய அந்தப் பணியை நாங்கள் பார்த்தவர்கள்; அனுபவித்தவர்கள். இப்போது அவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற நீங்கள்,

என்னுடைய சொந்த ஊர்த் தொகுதியைச் சார்ந்தவர்; இப்போதுதான் உங்கள் தொகுதி ராசிபுரம், அதற்கு முன்பு அது சங்ககிரி. சங்ககிரி தொகுதியில்தான் நான் பிறந்த வீடு இருக்கிறது. அந்தத் தொகுதியினுடைய உறுப்பினராக இருந்து நீங்கள் ஆற்றிய பணிகளையும் பார்த்தவன் என்கிற வகையிலே தனிப்பட்ட முறையிலும், மகிழ்வோடு உங்களை வரவேற்கிறேன்; வாழ்த்துகிறேன்; பாராட்டுகிறேன்.

இந்த அவையில், சென்னை மாகாணமாக இருந்த காலத்திலேயே தொடர்ந்து ஒன்பது ஆண்டுகள் நீடித்த ஒரு சபாநாயகராக இருந்தவர் திரு. சிவசண்முகம்பிள்ளை அவர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சைமன் கமிஷன், பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திலிருந்து, பிரிட்டிஷ் அரசிலிருந்து வரக்கூடிய எல்லா கமிஷன்களிலும், காந்தியடிகளோடு, அம்பேத்கர் அவர்களோடு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, நம்முடைய நாட்டில் செய்ய வேண்டிய பணிகள் குறித்த விவாதம் மிகச் சூடாக நடந்த காலத்தில், அந்த மக்களின் பிரதிநிதியாக வலுவாக வாதிட்டவர்; முறையீடுகளைச் செய்தவர். ‘அவர் இந்த அவையினுடைய தலைவராக ஒன்பது ஆண்டுகள் இருந்த காலம் ஒரு பொற்காலம் என்று சொல்லக்கூடிய காலம்’ என்ற செய்தி சமீபத்திலே பத்திரிகைகளிலேயும் வந்தது. அவர் “ஒருபால் கோடியதுமில்லை”; தான் எந்தக் கட்சி என்கிற நினைவோடு செயல்பட்டதும் இல்லை. எல்லாத் தரப்பு மக்களாலும், எல்லாத் தரப்பு அரசியல் கட்சித் தலைவர்களாலும் பாராட்டப்பட்ட ஓர் அவைத் தலைவர் என்று சமீபத்திலேயும் அவருக்குப் புகழாரம் சூட்டப்பட்டு பத்திரிகைகளிலே வந்த செய்தியை நான் பார்த்தேன்.

அதைப்போலவே, தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரதிநிதியாக, அதுவும் அடுக்கப்பட்ட மூட்டைகளில் அடிமூட்டை என்று சொல்லக்கூடிய அந்தச் சமூகத்திலிருந்து, அருந்ததியர் சமூகத்திலிருந்து இன்று மிக உயர்வான இந்த மன்றத்தின் தலைவர் பதவிக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். இந்தப் பொறுப்பு உங்களுடைய சமூகத் தளத்திலிருந்து நீங்கள் பிறந்து, வளர்ந்து இன்றைய நிலையை எய்துவதற்கிடையில் அனுபவித்திருக்கிற அத்தனை கஷ்டங்களுடைய, அத்தனை துன்பங்களுடைய, அத்தனை அனுபவங்களுடைய பகிர்வோடும் நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என்று நான் நம்புகிறேன்.





*முற்பகல் 10–30*

இந்த அவை தமிழக மக்களுடைய பிரச்சினையை எடுத்துச் சொல்வதற்கான அவை. மக்களுடைய பிரச்சினையை இங்கே பேசுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற உறுப்பினர்கள் நாங்கள். நாங்கள் பேசுகின்றபோது ஒதுக்கப்படும் நேரம் பற்றி ஏற்கெனவே எனக்கு முன்னால் உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதைப் போல எங்களுடைய நேரம் குறைக்கப்படக்கூடாது. அவை முன்னவர்கூட சொன்னார்கள்.— எதிர்க்கட்சியினர் பேசுகிறபோது நீங்கள் வாய்ப்புத் தரவேண்டும். இருந்தாலும் அதற்கு சில சங்கடம் இருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். சங்கடத்தை நீங்கள் சற்றுப் பொருட்படுத்தாமல் கூடுதல் வாய்ப்பை, கூடுதல் நேரத்தை எதிர்க்கட்சியினருக்குக் கொடுப்பது அவசியம். அது இந்த மன்றத்தினுடைய பெருமையை, மாண்பை காக்கும். இந்த மன்றம் ஆற்ற வேண்டிய அரும்பணிகளை நிறைவேற்றுவதற்கான ஒரு சூழ்நிலையை அதிகப்படுத்தும்.

முக்கியமாக, கேள்வி நேரம், பிரிட்டிஷ் நாடாளுமன்ற முறையிலே மரபு வழியாக வரக்கூடிய ‘நேரம் இல்லா நேரம்’ Zero hour போன்றவற்றை எல்லாம் நீங்கள் அனுமதிப்பதன் மூலமாக மக்கள் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகளை, சபை கூடுகிறபோது, அப்போது ஏற்படக்கூடிய, திடீரென்று வரக்கூடிய பிரச்சினைகளை இந்த அவையிலே எழுப்புவதற்கான வாய்ப்பையும் நீங்கள் வழங்குவீர்கள் என்று நான் நம்புகிறேன். நிச்சயமாக அந்த மரபு இங்கே போற்றப்பட வேண்டும், பாராட்டப்பட வேண்டும். உங்களுடைய சீரிய தலைமையில் இந்த அவை புதிய பொலிவை, புதிய பெயரை சீரிய முறையிலே செயலாற்றிய ஒரு சபை, எதிர்க்கட்சிகளுக்கு ஜனநாயக வாய்ப்புகள் மறுக்கப்படாமல் வழங்கப்பட்ட சபை என்கிற பெருமையை எய்த வேண்டும் என்று உங்களை வாழ்த்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்தினுடைய தலைவராகத் தங்களைத் தேர்ந்தெடுத்து இருப்பது என்பது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் முதலில் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எம். ஆறுமுகம்] [2012 அக்டோபர் 10

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு வைர விழா காணும் நேரத்தில், வைரம் பதிந்ததைப் போல தமிழக சட்டமன்றத்தினுடைய தலைவராக ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்திருக்கக்கூடிய, கடைக்கோடியில் உள்ள ஒரு சமூகத்தைச் சார்ந்தவர் பேரவைத் தலைவராக பொறுப்பேற்று இருப்பது என்பது வரலாற்றில் ஒரு வைரக் கல் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* தங்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நான் 1980 ஆம் ஆண்டில் இந்தச் சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலேயே நீங்களும் சட்டமன்ற உறுப்பினர். உங்களுடைய செயல்பாடு, உங்களுக்கு இருக்கக்கூடிய பண்பு, ஆற்றல், திறமைகள் இவை முழுவதும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்றையதினம் 14–வது சட்டமன்றத்தினுடைய தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பது என்பது, தமிழகச் சட்டமன்றத்தினுடைய வைர விழாவைக் கொண்டாடுகின்ற நேரத்தில், வைரம் பதித்ததைப் போல உங்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பது என்பது *(மேசையைத் தட்டும் ஒலி)* மகிழ்ச்சிக்குரியது, பாராட்டுதலுக்குரியது மட்டுமல்ல; கடைக்கோடியில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தமிழக மக்கள் இன்றையதினம் விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நான் சார்ந்திருக்கக்கூடிய இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக உங்களைப் பாராட்டுகிறேன். இதே தமிழகத்தில் நடைபெற்றிருக்கக்கூடிய நிகழ்வுகளை நினைவுகூர்கின்ற நேரத்தில், சாணிப் பாலுக்கும், சவுக்கடிக்கும் எதிர்த்துப் போராடிய ஒரு கட்சி, சமூக மாற்றத்திற்காக இருக்கக்கூடிய கட்சி இந்திய கம்யூனிஸ்டு கட்சி. அப்படி சாணிப் பால், சவுக்கடியை எதிர்த்துப் போராடி அந்தச் சமூக மக்களுக்காக விடுதலை வாங்கிக் கொடுத்து இருக்கக்கூடிய கட்சியின் சார்பாக இந்த நேரத்தில் உங்களைப் பாராட்டுவதோடு, இந்தச் சபையை நெறி தவறாது நடத்தி அனைவருக்கும் சமமான வாய்ப்பினைக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் எதிரிக்கட்சியாக இருக்க விரும்பவில்லை. எதிர்க்கட்சியாகவே இருந்து இந்திய கம்யூனிஸ்டு கட்சி நிச்சயமாக இந்தச் சட்டமன்றத்திலே செயல்படும் என்று இந்த நேரத்திலே உங்களைப் பாராட்டி, வாழ்த்தி அனைவருக்கும் சம வாய்ப்பைக் கொடுத்து இந்தச் சபையை நடத்திச் செல்வதற்கு நீங்கள் வாய்ப்பளிக்க



2012 அக்டோபர் 10] [திரு. எம். ஆறுமுகம்]

வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நெஞ்சார வாழ்த்தி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பேரவைத் தலைவராக புதிதாகப் பதவியேற்று இருக்கின்ற உங்களுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மனமார்ந்த வணக்கத்தையும் வாழ்த்துகளையும் கூறிக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–35*

உண்மையிலேயே ஒரு நல்ல பேரவைத் தலைவராக, தமிழக மக்களின் சிறப்புமிக்க இந்தப் பேரவையை நடத்துகின்ற ஒரு சிறப்பான தலைவராக நீங்கள் இருந்து, நடுவராக இருந்து, ஆளுங்கட்சியினரானாலும் சரி, எதிர்க்கட்சியினரானாலும் சரி, அவர்கள் அனைவருக்கும் சிறப்பான முறையிலே பேசுவதற்கு அவர்களின் தொகுதியிலுள்ள பிரச்சினைகள், இந்த நாட்டின் பிரச்சினைகளையெல்லாம் பேசித் தீர்ப்பதற்கு, ஆளுங்கட்சி என்றோ, எதிர்க்கட்சி என்றோ பாராமல் அனைவருக்கும் ஒரே விதமாக நல்ல தீர்ப்பை வழங்கும் விதத்திலே, நல்ல சபாநாயகராக, நல்ல தலைவராக விளங்கி, இந்த நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் விதத்திலே நீங்கள் சிறப்புமிக்க தலைவராகத் திகழவேண்டுமென்று உங்களை வாழ்த்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதினான்காவது தமிழகச் சட்டமன்றத்தின் பேரவைத் தலைவராக நீங்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, எங்கள் மனித நேய மக்கள் கட்சிக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. நீங்கள் உங்களுடைய பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்கு முதலிலே நான் எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்தித்துக்கொள்கின்றேன். நிச்சயமாக ஒடுக்கப்பட்ட மக்களிலும் ஒடுக்கப்பட்ட மக்களாக இருக்கக்கூடிய அருந்ததியர் மக்களுக்காக வேண்டி மட்டுமல்ல; இந்த நாட்டிலே சமூக நீதி

தழைத்தோங்கி இருக்க வேண்டுமென்று எண்ணக்கூடிய ஒவ்வொருவருக்கும் இன்று ஒரு பொன் நாள் என்றே நாங்கள் கருதுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள், நீங்களே இந்த அவையினுடைய துணைத் தலைவராக இருந்திருக்கிறீர்கள். ஆனால், இந்தியாவில் எந்தவொரு மாநிலத்திலும் அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வரலாறு தமிழகத்திலே இன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதற்காக உங்களை மீண்டும் நான் மனமாரப் பாராட்டுகின்றேன், வரவேற்கின்றேன். நம்முடைய முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சபாநாயகரைப் பற்றிப் பேசும்போது ஒரு கருத்தை மிகத் தெளிவாகச் சொன்னார், “The Speaker represents the House; He represents the dignity of the House, the freedom of the House and because the House represents the Nation in a particular way, the Speaker becomes a symbol of the Nation’s freedom and liberty.  Therefore, that should be an honoured position, a free position and should be occupied always by persons of outstanding ability and impartiality.”

தமிழிலே மொழிபெயர்க்க வேண்டுமென்றால், “ஒட்டுமொத்த பேரவையின் பிரதிநிதியாக சபாநாயகர் விளங்குகிறார். பேரவையின் கண்ணியத்தைப் பிரதிபலிப்பவராக, அதன் சுதந்திரத்தின் அடையாளமாக அவர் திகழ்கிறார். பேரவை, ஒரு குறிப்பிட்ட வகையில் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்துவதால் நாட்டில் நிலவும் சுதந்திரத்தின் சின்னமாக சபாநாயகர் விளங்குகிறார். எனவே, சபாநாயகர் பதவி என்பது கண்ணியத்திற்குரியது, சுதந்திரமானது, ஆற்றல்மிகுந்த பாரபட்சம் இல்லாதவர்களால் மட்டுமே அந்தப் பதவி நிரப்பப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இத்துணை இலக்கணங்களையும் பொருந்தியவராகத்தான் நாங்கள் உங்களை இந்த அவையினுடைய தலைவராக பார்க்கின்றோம். நிச்சயமாக உங்களுடைய காலகட்டத்தில் அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் முதல்முறையாக சபாநாயகராக வீற்றிருந்தார் என்ற வரலாறு மட்டுமல்லாமல், அந்த அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த சபாநாயகர் பாரபட்சம் இல்லாமல் அனைவருக்கும், குறிப்பாக எதிர்க்கட்சியினருக்கும், கருத்துகளைப் பிரதிபலிப்பதற்கு வழிவகுத்தார் என்ற வரலாற்றை நீங்கள் நிச்சயம் படைப்பீர்கள்



என்ற நம்பிக்கை இருக்கிறது. மீண்டும் உங்களை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக வாழ்த்தி, உங்களுக்காகப் பிரார்த்தித்து விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதினான்காவது சட்டமன்றப் பேரவையினுடைய பேரவைத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய தங்களை, புதிய தமிழகம் கட்சியின் சார்பாக முதற்கண் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.  உங்களைப் பாராட்டுகின்ற அதே வேளையில் சுதந்திரம் பெற்ற 65 ஆண்டுக் காலத்தில் சட்டமன்றத்தினுடைய இந்த உயரிய இருக்கையை 1955–க்குப் பிறகு யாருமே அலங்கரிக்கவில்லையே என்ற ஒரு குறையை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில், ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் என்ற வகையிலே மட்டுமல்லாது, எல்லாவிதமான தகுதிகளையும் பெற்றிருக்கக்கூடியவர் என்ற வகையில் தங்களைப் பேரவைத் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும்  புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

*முற்பகல் 10–40*

ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் இந்த அவையை அலங்கரிப்பதிலே நீங்கள் உங்களுடைய குடும்பத்தாரைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல, தமிழகத்திலே வாழ்கிற இரண்டு கோடி ஒடுக்கப்பட்ட மக்களும் இன்று பேருவகை கொள்கிறார்கள். இந்திய நடுவண் அரசை நடத்திக்கொண்டிருப்பவர் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒருவரே. அதேபோல, இந்த அவையிலேயும் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் பேரவைத் தலைவராக அமர்த்தப்பட்டிருக்கிறார் என்று சொன்னால் இது நிச்சயமாக வரலாற்றிலே இடம்பெறக்கூடிய ஒரு நிகழ்ச்சி. எனவே, இந்த அவையை யாருடைய குற்றச்சாட்டுக்கும் ஆளாகாமல் நடத்துகின்ற பொறுப்பு இன்று உங்களுடைய தோளிலே சுமத்தப்பட்டிருக்கிறது.

நாங்கள் எல்லாம், ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் இந்த இருக்கையிலே அமர்ந்திருக்கிறார் என்று பெருமைகொள்கின்றபோது, அதே வேளையிலே ஒடுக்கப்பட்ட சமுதாய மக்களுடைய குறைகளையெல்லாம் இந்த அவையிலே எடுத்து வைக்கின்றபோது, கொஞ்சம் அதிகமாக, கூடுதலாக எங்களுக்கும் நீங்கள் கருணை காட்ட வேண்டும், நேரம் ஒதுக்கிட வேண்டும் என்பதுதான் இந்த நேரத்திலே நாங்கள் உங்களிடத்திலே வைக்கக்கூடிய வேண்டுகோள். எனவே, இன்று எத்தகைய மகிழ்ச்சியோடும், உவகையோடும் இந்தப் பொறுப்பை ஏற்று இருக்கின்றீர்களோ, அதே அளவுக்கு அவையினுடைய மாண்பை, இந்த அவையினுடைய பெருமையை, நாளைய வரலாறு எழுதுகின்றபோது, ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் ஒரு எடுத்துக்காட்டாக இந்த அவையை நடத்தினார் என்ற ஒரு வரலாறும் எழுதப்பட வேண்டும். அந்த வகையிலே உங்கள் செயல்பாடு அமைந்திட வேண்டுமென்று புதிய தமிழகம் கட்சியின் சார்பாக மனதார வாழ்த்தி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** என் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரம்பரியமிக்க இந்த மாமன்றத்தில், பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு சபை முன்னவர் அவர்களாலும், மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களாலும் பெருமைமிக்க இருக்கையில் அமர்த்தி வைக்கப்பட்டுள்ள தங்களை வாழ்த்திப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றிதனைத் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பதவிக்கு ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அமர வைத்து, அழகு பார்த்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*60* ஆண்டுகள் கடந்த இந்த மாமன்றத்தின் பேரவைத் தலைவராக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்களுக்குப் பிறகு, ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த தங்களை இந்தச் சிறப்புமிக்க மாமன்றத்தின் தலைவராக அமர்த்தியிருப்பது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தாழ்த்தப்பட்ட,





ஒடுக்கப்பட்ட சமுதாய மக்கள்மீது கொண்டுள்ள பேரன்பையும், பெருமதிப்பையும் எடுத்துக்காட்டுகிறதென்றால் அது மிகையாகாது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அமைச்சராக, நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராக, சிறப்பாகப் பணியாற்றி *2011* ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் ராசிபுரம் தனித் தொகுதியில் வெற்றி பெற்று, இன்று தாங்கள் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருப்பதை என் சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் வாழ்த்துகிறேன்.

> "சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
> கோடாமை சான்றோர்க்கு அணி"

என்ற குறளுக்கேற்ப, அதாவது முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாம் என்ற குறளுக்கேற்ப இந்தச் சபையில் எந்தப் பாகுபாடுமில்லாமல், அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்க வேண்டும், இங்கு எனக்கு முன் பேசிய திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், பூனை தன் குட்டியைக் கவ்வி பாதுகாப்பாகத் தூக்கி செல்லும், ஆனால் எலியைத் தூக்குவதைப்போல தூக்கக் கூடாது என்று சொன்னார்கள். சில சமயம் பூனை எலியைத் தூக்க வேண்டிய பணியைச் செய்ய வேண்டிய கடமை இருந்தாலும், நிச்சயமாக அதுபோன்று இங்கு நடக்காது. ஏனென்றால் நல்லவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, சபாநாயகர் பதவியிலே அமர்த்தியிருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆக, தாங்கள் நடுநிலை காத்து, அனைவருக்கும் சம வாய்ப்பளித்து, தமிழக மக்களின் மற்றும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு இச்சபையை சிறப்பாக நடத்திட வேண்டுமென்று கேட்டு, மீண்டும் உங்களை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் வாழ்த்தி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரம்பரியம் மிக்க இந்தச் சட்டமன்றத்தில், வைர விழா காணுகின்ற இந்தக் காலகட்டத்தில் தாங்கள் சபாநாயகராகப்

[திரு. பி.வி. கதிரவன்] [2012 அக்டோபர் 10

பொறுப்பேற்றிருப்பதற்கு எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவிக்கிறது. கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக பாதிக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களில் கடைசியாக இருக்கின்ற அருந்ததியினர் குலத்தில் பிறந்த தங்களை சபாநாயகராக்கிப் பெருமை சேர்த்திருக்கின்றவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் சமதர்ம சமுதாயத்தை அமைத்திட வேண்டுமென்ற பெரிய நோக்கத்தோடு, பெருமை சேர்க்கின்ற இந்த சபாநாயகர் பொறுப்பில் தங்களை அமர்த்தியிருக்கிறார்கள். தாங்கள் ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். அமைச்சராகவும் இருந்திருக்கிறீர்கள். துணை சபாநாயகராக இதே மன்றத்தில் பணியாற்றியிருக்கிறீர்கள். அனுபவம் மிக்க தங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சபாநாயகராக ஆக்கியிருக்கின்றார்கள். தாங்கள் சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து, ஒரு வழிகாட்டியாக, சிறந்த சபாநாயகராகச் செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் இருக்கின்ற இந்த மன்றத்தில் இருவருக்கும் சம உரிமை இருக்கின்றது. சில காலகட்டங்களில் தங்களுக்குத் தர்மசங்கடமான சூழ்நிலைகள் வரும். அதையெல்லாம் நீங்கள் சீர்தூக்கி, ஆளும் கட்சியினருடனும், எதிர்க்கட்சியினருடனும் சகோதர பாசத்தோடு செயல்பட்டு, வழிநடத்த வேண்டுமென்று உங்களைக் கேட்டு, நீங்கள் சிறந்த சபாநாயகராகப் பணியாற்ற வேண்டுமென்று அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக மனதாரப் பாராட்டி, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

***திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்றப் பேரவைத் தலைவராகத் தாங்கள் இன்று பொறுப்பேற்றிருப்பதற்கு முதற்கண் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு சட்டமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றம். சமூக விடுதலைக்காக, நாட்டு விடுதலைக்காகத் தொண்டாற்றிய அப்பழுக்கற்ற தலைவர்கள் அலங்கரித்த இந்த உயர்ந்த இருக்கையில், சிம்மாசனத்தில் அமர்ந்து, அன்னைத் தமிழகத்தில் ஆட்சி அதிகார மையமாக இருக்கின்ற



2012 அக்டோபர் 10] [திரு. உ. தனியரசு]

இந்தச் சட்டமன்றத்தை வழிநடத்துகின்ற பொறுப்பை, பதினான்காவது சட்டமன்றப் பேரவையில் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற உத்தமத் தலைவி நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களுக்கு வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணல் காந்தி, அண்ணல் அம்பேத்கர், கர்மவீரர் காமராசர், ஐயா பசும்பொன் முத்துராமலிங்கம், வ.உ. சிதம்பரம் பிள்ளை, பெரியார் உள்ளிட்ட சமூக சீர்திருத்தவாதிகள் கண்ட கனவை நனவாக்கியுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–50*

குறிப்பாக, சுதந்திர இந்தியாவின் துவக்க காலத்தில், 1955 ஆம் ஆண்டுவரை, ஒடுக்கப்பட்ட பெரும்பான்மை சமூகத்தின் பிரதிநிதியாக சட்டமன்றத்தை திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் அலங்கரித்தார்கள். அதற்குப் பிறகு 60 ஆண்டுகள் கழித்து, வைர விழாவை எட்டுகின்ற நிலையில், இன்னும் சொல்லப்போனால் வைர விழாவை நடத்துகின்ற பேரவைத் தலைவராக, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் கடைநிலையில் இருக்கின்ற ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த, உழைப்பிற்கும், நேர்மைக்கும், விசுவாசத்திற்கும் வடிவமாகத் திகழ்கின்ற, இந்தியாவின் கடைசி நிலையில் இருக்கின்ற அருந்ததியினர் சமூகத்தில் பிறந்தவரும், நேர்மையானவரும், தனது இயக்கத்திற்கும், தான் கொண்ட கொள்கைக்கும், அன்று முதல் இன்றுவரை அம்மா அவர்களுடைய விசுவாசத்திற்கும், கழகத்தினுடைய விசுவாசத்திற்கும், உழைப்பிற்கும் (மேசையைத் தட்டும் ஒலி) முன்னுதாரணமாக விளங்குகின்றவருமான தங்களை நியமித்ததன்மூலம், திராவிட இயக்க அரசியல் வரலாற்றில், சமூக விடுதலைக்காக, சம நீதிக்காக, சாதி மறுப்பிற்காகத் தொண்டாற்றி, திராவிட இயக்க வரலாற்றில் வேறு எந்த முதலமைச்சரும், ஆட்சியிலிருந்த தலைவரும் செய்யாத ஒரு சாதனையை, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) திராவிட இயக்க ஆட்சி வரலாற்றில் செய்யாத சாதனையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துள்ளார்கள். ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மதிப்பு மிக்க இந்தப் பொறுப்பைத் தந்து தீண்டத்தகாத சமூகமெனக் கருதப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகத்தை இந்த அதிகார மையத்தில், ஓர் உயர்ந்த இருக்கையில் அமர வைத்து அழகு பார்க்கிற, சம நீதி காத்த, சமூக நீதி காத்த வீராங்கனையாக இருக்கின்றவர் நம்முடைய புரட்சித் தலைவி

அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த திராவிட இயக்க அரசியல் வரலாற்றில் ஒரு பரிணாமமாக விளங்கிய, தீண்டத்தகாத சமூகம், பிற்போக்கு சமூகம் என்று ஒதுக்கிய நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கிற வரலாற்றைப் பதிவு செய்திருக்கிறார் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றப் பேரவைத் தலைவராக தங்களை இன்று தேர்வு செய்து, நியமனம் செய்திருப்பது என்பது, இந்திய ஆட்சித் துறை வரலாற்றில் நம்முடைய தமிழகத்தினுடைய சட்டசபை வரலாற்றில், இந்த வைர விழா காணும் நேரத்தில் ஒரு வைர வரலாறாகவே பதிவு செய்யப்படும். அதற்கு வாய்ப்பு தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், தங்களுக்கும், நான் சார்ந்திருக்கின்ற இயக்கத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த, தலைதாழ்ந்த வணக்கத்தைச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாள் தமிழக சட்டமன்ற வரலாற்றிலேயே ஒரு குறிப்பிடத்தகுந்த நாள். தங்கத் தாம்பாளத்தில் வைர எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய, ஒடுக்கப்பட்ட மக்களின் திருநாள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே உங்கள் இருக்கைக்கு மேலே இருக்கிற, தங்கள் வாழ்க்கையைப் பாடமாக்கிக் கொண்டு, இன்றைக்கு படமாக இருந்துகொண்டிருக்கிற அண்ணல் காந்தியடிகளும், பேரறிஞர் அம்பேத்கர் அவர்களும், தந்தை பெரியார் அவர்களும், காலமெல்லாம் எதற்காக உழைத்தார்களோ, பாடுபட்டார்களோ அந்தக் கனவை, இலட்சியத்தை அந்த மூவரின் உருவமாக இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிற நம்முடைய முதலமைச்சர், போற்றுதலுக்குரிய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள்.

கிராமங்களிலே ஒடுக்கப்பட்ட பகுதி மக்களிடையே ஒரு பழமொழி சொல்வார்கள், அது உங்களுக்குத் தெரியும், எனக்கும் தெரியும், “இனி ஒருவன் இதற்குப் பிறந்து வரவேண்டும்” என்று சொல்வார்கள். விடிவு காணாத பிரச்சினைக்குத் தீர்வு





காண வேண்டுமானால், உங்களுக்குத் தெரியும், எனக்குத் தெரியும், நம்முடைய கிராமங்களிலே ஒரு பழமொழி சொல்வார்கள், “இனி ஒருவன் இதற்குப் பிறந்து வரவேண்டும்” என்று. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நம்முடைய அருமைப் பெரியவர் திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் பேரவைத் தலைவராக இருந்தபோது பிறந்திருப்பார். இனி அதுபோல் ஒரு பேரவைத் தலைவர், அவர் பிறந்து வந்த பிறகே நியமிக்கப்பட வேண்டுமென்று விதி இருந்திருக்கிறது. இன்றைக்கு 65 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு அது நிறைவேறி இருக்கிறது. அம்மா அவர்களுடைய வயது இன்றைக்கு 64. பெரியவர் ‘ஜே.எஸ்.’, ஒடுக்கப்பட்ட மக்களால், பாபா சாகிப் அம்பேத்கர் அவர்களால், அண்ணல் காந்தியடிகள் அவர்களால் ‘ஜே.எஸ்.’, ‘ஜே.எஸ்.’ என்று செல்லமாக அழைக்கப்பட்ட பெரியவர் ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் உட்கார்ந்திருந்த இந்தப் பேரவைத் தலைவர் இருக்கையிலே அச்சமூகத்தவரை அமர்த்தும் கனவு, அம்மா அவர்கள் பிறந்து, அவர் முதலமைச்சராக இருக்கின்றபோது இன்றைக்கு நிறைவேறியிருக்கிறது என்கிறபோது அந்தச் சமூகமே, அந்த இரண்டு கோடி ஒடுக்கப்பட்ட மக்களும், ஒடுக்கப்பட்ட மக்களின் ஒவ்வொரு துளி குருதியும், இதற்குக் காரணமாக இருந்து, இந்த வாய்ப்பை உருவாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் பேரவையின் சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்டு வருகிற உங்களை, கடந்த 30 ஆண்டுக் காலமாக நான் அறிவேன். இந்தச் சமூகம், இந்தச் சமுதாயத்தை அருந்ததியர் சமூகம் என ஊனப்படுத்தியது. ஒரு விபத்து உங்கள் உடலையே ஊனப்படுத்தியது. 1984–லே இந்தச் சட்டப் பேரவை உறுப்பினராக நீங்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, சங்ககிரியிலிருந்து சென்னைக்கு வந்துகொண்டிருந்தபோது, மிகக் கடுமையான விபத்துக்குள்ளாகி, பிழைப்பீர்களா, இல்லையா என்று மற்றவர்களெல்லாம், குடும்பத்தினரெல்லாம் கதறி அழுகிற அளவுக்கு ஒரு மாத காலத்திற்குமேல் சென்னை மருத்துவமனையிலே இருந்து, அன்றைக்கு ஊனப்பட்டு இருந்தீர்கள்.

இந்தச் சமூகம், ஊனப்படுத்தப்பட்ட சமூகம்; ஒரு விபத்து உங்களை ஊனப்படுத்தியது. ஆனால், ஊனமுற்றவர்களுக்குத் தாயாக நான் இருக்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை

கை தூக்கிவிடுவதற்கு நான் இருக்கிறேன் என்று (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு மட்டுமல்ல; ஊனமுற்ற இந்தச் சமுதாயத்திற்கே உயர்வு தருகிற வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெரியவர் 'ஜே.எஸ்.' அவர்களுக்குப் பிறகு, 65 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, விசுவாசத்திற்கும், நம்பிக்கைக்கும், உழைப்பிற்கும், கட்சி கட்டுப்பாட்டிற்கும் பெயர்பெற்ற உங்களை, மரபுகளைப் பின்பற்றுகிற ஒரு தொண்டனாக இருந்த உங்களை பேரவைத் தலைவரின் இருக்கையிலே உட்கார வைத்திருக்கிறார்கள் என்கிறபோது, உங்களைப் பாராட்டுவதைவிட இந்தப் பாராட்டுக்கு உரியவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பாராட்டுகள் எல்லாம் அவர்களையே சேரும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைப் பாராட்டிட வேண்டும். இந்தப் பாராட்டிற்கு அடித்தளமிட்டவர்கள் அவர்கள். அவர்களைப் பாராட்டியாக வேண்டும்.

*முற்பகல் 10–55*

அருந்ததியர் சமூகத்தின் மிகப் பெரிய தலைவர்களாக இந்தப் பேரவையிலே இருந்தவர்கள் மறைந்த எஸ்ஜி. குருசாமி அவர்களும், எஸ். ஜெகன்னாதன் அவர்களும். அந்த வரிசையிலே ஏற்பட்டிருந்த மிகப் பெரிய இடைவெளியை, அவ்வளவு பெரிய வரலாற்றுத் துண்டிப்பை இன்றைக்குப் போக்கி, திரு. ப. தனபால் அவர்களை, மாண்புமிகு பேரவைத் தலைவர் தனபால் என்று முதலமைச்சர் அவர்களே, உங்களை 'தலைவர் அவர்களே' என்று அழைக்கிற அளவிற்கு அந்தத் தகுதி அளித்திருக்கிறார்கள் என்றால், ஒட்டுமொத்த இந்தச் சமூகத்திற்கே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தகுதி கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'தலைவர் அவர்களே' என்று அவர்களே விளிக்கிற அந்தத் தன்மையைக் கொடுத்திருக்கிறபோது, அந்தத் தகுதியைத் தந்திருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரியவர் சிவசண்முகம் பிள்ளை அவர்கள் இந்தப் பேரவையிலே அவைத் தலைவராக இருந்து மிகப் பெரிய வரலாற்று மரபுகளை உருவாக்கியவர். இங்கே நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டதைப் போல நேரமற்ற நேரம்–Zero Hour–என்பதை இந்த அவையிலே மரபாக்கியவர் பெரியவர் ஜே.எஸ். அவர்கள். அதுமட்டுமல்ல, புதிய பல மரபுகளை இங்கே புகுத்தியவர் பெரியவர் ஜே.எஸ். அவர்கள். அதுமட்டுமல்ல, எல்லாவற்றுக்கும் மேலாக



சட்டப் பேரவை தலைவர் பதவி முடிந்த பிறகு அவரைச் சார்ந்திருந்த பேரியக்கம் அவருக்கு மீண்டும் தேர்தலிலே போட்டியிடுவதற்கு வாய்ப்பு தந்தபோது பேரவைத் தலைவராக இருந்த நான் மீண்டும் தேர்தலிலே போட்டியிட மாட்டேன், அந்த வாய்ப்பு எனக்கு வேண்டாம். கட்சி அரசியலுக்கு வர மாட்டேன் என்று ஒதுங்கிக் கொண்டவர் பெரியவர் ஜே.எஸ். அவர்கள். ஆகவேதான் 60 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு இன்றைக்கும் பேசப்படுகிறவராக இருக்கிறார். அதற்குப் பிறகு அவர் மத்திய தேர்வாணைக் குழு உறுப்பினராக இருந்தார். நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக இருந்தார். நியமனப் பதவிகளுக்கு அவர் சென்றாரே தவிர, கட்சி அரசியலுக்கும், தேர்தலுக்கும் நான் வர மாட்டேன் என்று சொன்ன கண்ணியத்தை, அப்படிப்பட்ட கண்ணியத்தை புரட்சித் தலைவியின் புகழைக் காப்பாற்றுகிற நீங்கள், காப்பாற்றுகிறவராக கடைசிவரை இந்தச் சமூகத்தின் சிறப்பை நிலைநாட்டுவதற்கு அப்படிப்பட்ட பணிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Speaker என்று சொன்னால் பேசுபவர். மக்களுக்காக மன்னரிடம் போய் பேசுகிறவர் என்பது மரபு. ஒரு கோடிக்கும் மேலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் குரலாக, ஊமைகளாய், பேச முடியாதவர்களாய் இருக்கிற அந்த ஊமைகளின் குரலாக, அதே ஊமைச் சமுதாயத்திலிருந்து மக்களுக்காகப் பேசுகிற இந்த மாமன்றத்தின் தலைவரை இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்கிறபோது (மேசையைத் தட்டும் ஒலி) பேசுவதற்கு எங்கே வாய்ப்பு இல்லாமல் போகப் போகிறது? பேசுவதற்கு எப்படி வாய்ப்பு இல்லாமல் போகப் போகிறது? பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் குரலைப் பற்றி சொல்கிறபோது ஊமைகளின் குரல் என்று சொன்னார். அப்படி இந்த ஊமைகளின் குரலாக, ஊமைகளின் அடையாளமாக, ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து இன்றைக்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்து இந்தத் தமிழகச் சட்டமன்றத்தின் உயர் பதவியான இந்தப் பதவியிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிற இந்த நேரத்தில், ஊமைகளின் குரலாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அடையாளப்படுத்தியிருக்கிற அந்த வரலாற்றை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன், பாராட்ட விரும்புகிறேன். இந்த அவையிலே மட்டுமல்ல,

[முனைவர் செ.கு. தமிழரசன்]   [2012 அக்டோபர் 10

தமிழகத்தின் கிராமங்களிலேயெல்லாம், ஒடுக்கப்பட்ட மக்கள் எங்களுக்கு கிடைத்திருக்கிற மதிப்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழை, எண்ணி எண்ணி, பாராட்டி பெருமிதப்படுகிற இந்த நடவடிக்கை *(மேசையைத் தட்டும் ஒலி)* என்றைக்கும் வரலாற்றிலே நிலைத்திருக்கக்கூடிய ஒரு நடவடிக்கையாக இருக்கும். அந்த நடவடிக்கையை நான் பேசுவதற்கோ, சொல்வதற்கோ வார்த்தைகள் இல்லை. உங்களை ‘தலைவர் அவர்களே’ என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அழைக்கிறார்கள் என்றால், தான் பாராட்டி, சீராட்டி வளர்க்கிற குழந்தையைப் பார்த்து ‘கண்ணே, மணியே, மரகதமே’ என்று சொல்லுவதைப் போன்றது அது. ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மாசறு பொன்னாய், மதிப்புமிகு தங்கமாய், விலை மதிக்க முடியாத வைரமாய் என்றென்றைக்கும் இந்த மக்கள் மனதிலே வாழக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* வைர விழா ஆண்டிலே, இந்த வைரத்திற்கு எங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகம் என்பது பண்பட்டதும், பயனுடையதும், ஆற்றல் மிகுந்ததும், அருமை வாய்ந்ததுமான ஆட்சி முறையாகும். ஆள்பவர், ஆளப்படுபவர் என்ற பேதம் இல்லாமல், நாட்டில் உள்ள அனைவரின் நன்மையையும், முன்னேற்றத்தையும் குறிக்கோளாகக் கொண்டதுதான் ஜனநாயகம் ஆகும். ஜனநாயகத்தில் மக்கள்தான் அரசின் கொள்கைகளைத் தீர்மானிக்கின்றனர். இப்படிப்பட்ட உயரிய ஜனநாயக ஆட்சியில் சுதந்திரமாக கருத்துகளைப் பிரதிபலிக்கும் இடமாக இந்தச் சட்டமன்றம் திகழ்கின்றது.

வரலாற்றுச் சிறப்பும், பெருமையும் கொண்டு விளங்குகிற இந்தப் பேரவையின் தலைவராகத் தாங்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு எனது பாராட்டினை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தியாவில் உள்ள பல அரசியல் தலைவர்களும் பாராட்டும் அளவிற்கு சிறந்து



2012 அக்டோபர் 10]   [செல்வி ஜெ ஜெயலலிதா]

விளங்கும் இந்தப் பேரவையில் தாங்கள் பேரவைத் தலைவராக வீற்றிருப்பது கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்தப் பேரவை வேற்றுமையில் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே தாங்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறீர்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராக தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், இந்த நிமிடம் முதல் அவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் கட்சி வேறுபாடின்றி நியாயமான தீர்ப்பினை வழங்கக்கூடிய பொறுப்பினை தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தாங்கள் இங்குள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் பொதுவானவர். இங்குள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் பாதுகாவலராக தாங்கள் விளங்குகின்றீர்கள்.

சட்டமன்ற வரலாற்றிலேயே சட்டமன்ற விதிகளையும், மரபுகளையும் கரைத்துக் குடித்தவர் திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் என்று சொல்வார்கள். “மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது” என்ற பழமொழிக்கேற்ப, தோற்றத்திலே சிறியவராக இருந்தாலும், அவையை நடத்துவதிலும், ஆங்கிலத்தில் உரையாடுவதிலும் கைதேர்ந்தவர். மிகச் சிறந்த பேரவைத் தலைவர் என அனைத்துக் கட்சியினராலும் பாராட்டப் பெற்றவர்.

இவரைப் போன்றே, டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களும் நடுநிலையோடு செயல்பட்டார். 1957 முதல் 1962 வரை பேரவைத் தலைவராக இருந்தார். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவரைப் பாராட்டுகையில், “நான் அந்த ஐந்து வருடங்களில்—பெருமையோடு சொல்லிக்கொள்வேன்—எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்தாலும், அப்பொழுது சட்டமன்றத் தலைவராக இருந்த மறைந்த டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்த நாங்கள் யாரும் வருத்தப்படத்தக்க விதத்தில் ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை” என்று கூறினார். அந்த அளவுக்கு நடுநிலைமையுடன் செயல்பட்டவர் டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்கள்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 அக்டோபர் 10

இதைப் போன்றே, திரு. எஸ். செல்லபாண்டியன், திரு. என். கோபால மேனன் என பல முன்னாள் பேரவைத் தலைவர்கள் இந்தப் பேரவையை நடுநிலைமையுடன் நடத்தி, பேரவையின் கண்ணியத்தையும், புகழையும் நிலைநாட்டியுள்ளார்கள்.

சட்டமன்ற ஜனநாயகம் என்பது, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு அவற்றை முழு அளவில் உறுதிப்படுத்தும் ஒரு சீரிய அமைப்பாகும். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களது ஜனநாயகக் கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும். உண்மையை உரைப்பவர்களாகவும், உரிமைக்குக் குரல் கொடுப்பவர்களாகவும், மாற்றாரை மதிக்கும் தன்மை கொண்டவர்களாகவும், நியாயத்திற்கு தலை வணங்குகிறவர்களாகவும் சட்டமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் அமைய வேண்டும். சட்டமன்ற ஜனநாயகம் வெற்றிபெற வேண்டுமானால், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜனநாயகப் பண்புகளை எந்த ஒரு சூழ்நிலையிலும், எந்த ஒரு நெருக்கடியிலும் செம்மையாகக் கட்டிக்காக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக சட்டமன்றத்திலே பொதுப் பிரச்சினைகளான வறுமை ஒழித்தல், வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல், குடிநீர் வசதிகள் செய்து தருதல், உற்பத்தியைப் பெருக்குதல், பொருளாதாரத்தை மேம்படுத்துதல், தொழில் வளத்தைப் பெருக்குதல், வாழ்வில் மக்கள் முன்னேற்றம் அடையச் செய்தல் ஆகியவற்றைப் பற்றி உறுப்பினர்களிடையே கருத்தொற்றுமை உண்டு. இந்தக் கொள்கைகளில் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் எந்தவித வேறுபாடும் இருக்க முடியாது. அதேசமயத்தில் அதை நிறைவேற்றுகின்ற முறையில், திட்டங்களின் வடிவமைப்பில் வேறுபாடுகள் இருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இவ்வாறு ஒருமனதாக, அதாவது unanimous ஆக முடிவெடுக்க முடியாத சூழ்நிலையில், வேறுபாட்டினை ஒற்றுமையின் அடிப்படையில்; உடன்பாட்டின் அடிப்படையில்; அதாவது consensus–ன் அடிப்படையில் களைவதுதான் சிறந்த ஜனநாயக முறையாக இருக்கும். இல்லையெனில், ஜனநாயகம் செயலிழந்து, பேச்சு சுதந்திரம் மட்டுமே மிஞ்சியிருக்கும். எனவே, ஜனநாயகம் தழைத்தோங்கும் வகையில் உறுப்பினர்களின் செயல்பாடுகள் அமைய வேண்டும் என்பதை இந்தத் தருணத்தில் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.



2012 அக்டோபர் 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*முற்பகல் 11–05*

ஆளுங்கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சியினர் ஒரு வாதத்தை முன்னிறுத்தும்போதும்; குற்றச்சாட்டை எழுப்பும்போதும்; அதற்கு ஆளுங்கட்சி சார்பிலே மறுப்புத் தெரிவிக்கும்போதும்; விவாதத்தில் அனல் பறக்கும். அந்தச் சமயத்தில் ஆளுங்கட்சியின் சார்பில் முதலமைச்சரும்; எதிர்க்கட்சிகளின் சார்பில் அனுபவம் வாய்ந்த மூத்த உறுப்பினர்களும் பதற்றத்தைத் தணிப்பதில் ஈடுபடுவார்கள். இது தேவைதான். அதேசமயத்தில், ஒரு செய்தியை, ஒரு நிகழ்வை வைத்துக்கொண்டு, மனம் போன போக்கில் பேசி, திட்டமிட்டு அவையில் அமளியை உருவாக்க நினைப்பது என்பதை எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இதுபோன்ற தருணங்களில், உறுப்பினர்கள் உண்மையிலேயே தங்களுடைய கருத்தை எடுத்துரைத்து வாதாடுகிறார்களா அல்லது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, குறை கூறி அமளியை ஏற்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கத்துடன் செயல்படுகிறார்களா என்பதை அறிந்து அதற்கேற்ப கண்டிப்புடன் செயல்பட வேண்டிய நிலையும் பேரவைத் தலைவராகிய உங்களுக்கு ஏற்படும்.

பேரவையின் விதிகளையும், மரபுகளையும், முன்னாள் பேரவைத் தலைவர்களின் நல்ல தீர்ப்புகளையும் கருத்தில் கொண்டு, இந்தப் பேரவையினை சட்டத்தின் அடிப்படையில் நடத்திச் செல்வதில் தாங்கள் அக்கறையும், ஆர்வத்தையும் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்லாமல் இங்குள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்கின்றது. இந்தப் பேரவை உறுப்பினர்கள் அனைவரின் உரிமையையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய தாங்கள் சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில், பின்தங்கிய பகுதியில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, முதுகலைப் பட்டம் பெற்றவர். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, தமிழக சட்டமன்ற வரலாற்றில் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த முதல் பேரவைத் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, தமிழக சட்டமன்ற வரலாற்றில் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த முதல் பேரவைத் தலைவர் தாங்கள்தான் என்பதிலும், (மேசையைத் தட்டும் ஒலி) முதன்

*முறையாக அருந்ததியர் சமுதாயத்தைச் சார்ந்த தாங்கள் இந்தப் பேரவையின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளீர்கள் என்பதிலும் எனக்கு மிக்க மகிழ்ச்சி. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றத்தில் தாங்கள் வரலாறு படைத்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மக்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1972–ல் துவக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் 1972 ஆம் ஆண்டு முதலே தங்களை இணைத்துக்கொண்டு, அந்த இயக்கத்தின் கொள்கைகளுக்காக தாங்கள் சிறந்த முறையில் பாடுபட்டிருக்கிறீர்கள். கட்சியில் பல்வேறு பொறுப்புகளைத் தாங்கள் வகித்திருக்கிறீர்கள். பொதுமக்களோடு, குறிப்பாக ஏழை, எளிய மக்களோடு நெருக்கமான தொடர்பும், உறவும் கொண்டவராகத் தாங்கள் விளங்கியிருக்கிறீர்கள். 1977 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து மூன்று முறை சங்ககிரி தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாங்கள், அனைவரும் பாராட்டும்வண்ணம் திறம்படப் பணியாற்றியிருக்கிறீர்கள். 2001 ஆம் ஆண்டு மீண்டும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாங்கள், அமைச்சராகப் பொறுப்பேற்று ஆதி திராவிடர் நலன், உணவு மற்றும் கூட்டுறவு இலாகாக்களை திறம்பட நிருவகித்து இருக்கிறீர்கள்.*

*முற்பகல் 11–10*

*தற்போது ஐந்தாவது முறையாக ராசிபுரம் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாங்கள் கடந்த 16 மாத காலமாக பேரவைத் துணைத் தலைவராகப் பணியாற்றி இருக்கிறீர்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும், பேரவைத் துணைத் தலைவராகவும் பணியாற்றிய அனுபவம் தங்களுக்கு உண்டு.*

*அனைவரிடத்திலும் அன்புடன் பழகும் தன்மை; பொதுமக்களோடு நெருங்கிப் பழகும் விதம்; நீண்ட நாட்களாக சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய அனுபவம்; அமைச்சராகவும், பேரவைத் துணைத் தலைவராகவும் பணியாற்றிய*





*அனுபவம் ஆகியவற்றின் காரணமாக தற்போது ஏற்றுள்ள பொறுப்பினைத் தாங்கள் திறம்பட வகிப்பீர்கள்; அதன்மூலம் அனைவரது பாராட்டினையும் பெறுவீர்கள் என்பதில் இருவேறு கருத்திற்கு இடமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாட்சிமை மிகுந்த இந்தச் சட்டப் பேரவையின் பெருமையையும், புகழையும் நிலை நிறுத்துவதிலே தங்களுடைய அறிவும், அனுபவமும், ஆற்றலும் நிச்சயம் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்கேற்ற அத்தனைத் திறனையும் தாங்கள் பெற்றிருக்கிறீர்கள்.*

*வீணையிலிருந்து சரியான இசை வரவேண்டும் என்றால், அதனுடைய தந்திகள், அதாவது வீணையின் நரம்புகள் இறுக்கமாகவும் இல்லாமல், தளர்வாகவும் இல்லாமல் நடுநிலைமையில் இருக்க வேண்டும். அதுபோல், இந்த அவை சீரோடும், சிறப்போடும் நடைபெற வேண்டுமென்றால் அதற்கு இன்றியமையாததாக விளங்குவது நடுநிலைமை. அப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இந்த நடுநிலைமை தங்களிடம் இயற்கையாகவே அமைந்துள்ளதால், இந்த அவையை சீரோடும், சிறப்போடும் தாங்கள் நிச்சயம் நடத்துவீர்கள் என்ற எனது நம்பிக்கையினைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுடைய தலைமையின்கீழ் இந்தப் பேரவையின் கண்ணியம் மேலும் சிறப்புறும் என்று சொல்லி, அனைவரின் பாராட்டுதல்களுக்கும் உரியவரான தங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எடுத்த காரியம் யாவிலும் வெற்றி! எங்கு நோக்கினும் வெற்றி! எண்ணும் எண்ணங்கள் யாவிலும் வெற்றி! எங்கும் வெற்றி! எதிலும் வெற்றி! எங்கள் சரித்திர நாயகிக்கு என்றும் வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) வங்கக் கடலோரத்தில் நீங்காத் துயில் கொள்ளும், தங்க நிகர்த் தலைவராம் புரட்சித் தலைவரின், ஒரே அரசியல் வாரிசாகத் திகழும், (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுகோடி தொண்டர்களின் உயிர் மூச்சாய் இயங்கிக் கொண்டிருக்கின்ற, தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் அறிவுசால் அன்னையே! நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெஞ்சம் கொண்டு, எதிர்வந்த சோதனைகளையெல்லாம் சாதனைகள் ஆக்கி, சாதனைகளைச்

[பேரவைத் தலைவர்] [2012 அக்டோபர் 10

*சரித்திரமாக மாற்றி அமைக்கும், வல்லமைபடைத்த தாயே! தமிழே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் முதலமைச்சராக மூன்றாம் முறையாகப் பொறுப்பேற்று, மக்கள் நலத் திட்டங்கள் பல தந்து, பொற்கால ஆட்சி தந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன்.*

*தமிழகத்தைத் தலைநிமிரச் செய்யவும், தமிழகத்து மக்களை நிம்மதியாக வாழ வைக்கவும், அயராது பணியாற்றி, அதிலே வெற்றி கண்டு, அந்த வெற்றிக்கு உதவும் முயற்சியாகப் பேரவை விளங்கிட, அவையை நடத்துவதற்கு எனக்கு வாய்ப்பு தந்து, மகிழ்ச்சியோடு அமர்ந்திருக்கும் எங்கள் இதய தெய்வத்தின் பாதங்களில் என் நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கிறேன்.*

*மாண்புமிகு பேரவை முன்னவர், நிதி அமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, பல்வேறு கட்சிகளின் தலைவர் பெருமக்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, அரசு அலுவலர்களே, பத்திரிகை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் பேரவையின் சார்பிலே என் முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இரண்டு விபத்துகளில் நான் பாதிக்கப்பட்டு, மருத்துவமனைகளிலே சிகிச்சை பெற்றபோது, அம்மா அவர்கள் மருத்துவ உதவி செய்து, “உற்ற துயர் அத்தனையும் காற்றாய்ப் பறந்து போகும்; கவலைப்படாதீர்கள்; நான் காப்பேன்” என்று ஆறுதல் வார்த்தைகள் சொல்லி, எனக்கும், என்னுடைய குடும்பத்திற்கும் ஆதரவு அளித்ததை, ஏற்கெனவே அவையில் பேசியதை நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.*

*மாண்புமிகு அம்மா அவர்கள் அன்றைக்கு இந்த ஏழைத் தொண்டனுக்குச் செய்த உதவிகளால், இன்றைக்கு உயிர் வாழ்கிறேன். அந்த உதவிகளை, என் உயிர் உள்ள வரை மறவாமல் நினைத்து வாழ்வேன்.*

*பொது வாழ்விலே எனக்குக் கிடைத்த அத்தனை உயர் பதவிகளும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே எனக்கு அளிக்கப்பட்டவை என்பதை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*



2012 அக்டோபர் 10] [பேரவைத் தலைவர்]

*முற்பகல் 11–15*

*எல்லா சாதிகளையும் ஒரு நேர் கோட்டிலே நிறுத்தி, நேர் கோட்டிலே பார்க்கிற சமத்துவத் தலைவி, எங்கள் ‘காவியத் தாய்’ என்பதற்கு நானே ஓர் உதாரணம். (மேசையைத் தட்டும் ஒலி) எந்நாளும் தாழ்ந்து கிடந்த மக்களை, கடைக்கோடியிலே இருக்கக்கூடிய மக்களை, கைப்பிடித்து அழைத்து வந்து, கரை சேர்த்ததோடு நின்றுவிடாமல், சிம்மாசனத்திலே அமர்த்தி, சிகரங்களாக உயர்த்துவது, நம் சமூக நீதி காத்த அன்னையின் இன்னொரு வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) ஒடுக்கப்பட்ட மக்களைக் கைதூக்கி விடுகிற மனப்போக்கு, எண்ணம், ஈடுபாடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர, வேறு எவருக்கும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பொதுத் தொகுதியிலே, ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களை வேட்பாளராக நிறுத்துவது, நாடாளுமன்ற மேலவைக்குத் தலித்துகளை நியமிப்பது, பாபா சாகிப் அம்பேத்கர் பெயரிலே மணி மண்டபம், அன்னாருக்கு சென்னையிலே திருவுருவச் சிலை, தாத்தா ரெட்டைமலை சீனிவாசனுக்கு நினைவு மண்டபம், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு நினைவு மண்டபம், பண்டிதமணி அயோத்தி தாசர் நூல்களை தேசிய உடைமையாக்கல் மற்றும் மக்கள் தொகையிலே 20 சதவிகிதம் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு நிதிநிலை அறிக்கையிலே அதிக நிதி ஒதுக்கீடு, இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.*

*ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலராக விளங்கும் ஒரே தலைவர் மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டுந்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகச் சட்டமன்றத்தின் வைர விழாவைக் கொண்டாடும் இந்த வேளையில், வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இந்த அரியணையிலே, சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டவர்களிலே, மிகவும் தாழ்த்தப்பட்ட இனத்திலே இருந்து வந்திருக்கிற என்னை அமர்த்தி, பாரம்பரியமிக்க இந்தச் சபையை நடத்துவதற்கு அனுமதியளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, தாழ்த்தப்பட்ட மக்களின் ஒளி விளக்காக, கலங்கரை விளக்கமாக நான் காண்கிறேன்.*

[பேரவைத் தலைவர்] [2012 அக்டோபர் 10

சவலைப் பிள்ளைகளையும், சத்துள்ள பிள்ளைகளாக மாற்றும் தாயைப் போல, பொருளாதாரத்திலே தாழ்ந்து கிடக்கும் இம்மக்களை உயர்த்தும் அன்னையாக, ஆதி திராவிட மக்களின் வாழ்வை ஒளிமயமாக்கும் 'விடிவெள்ளியாக', பழங்குடியின மக்கள் வாழ்வின் 'விடியலாக', பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் 'வானமாக', அனைத்து சமுதாய மக்களின் பாதுகாவலராகத் திகழ்பவர், மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சி மலர் தோட்டத்திலேப் பூத்த தனிப் பூவாக, இருட்டு மேகத்தைக் கிழித்து வந்த எழுச்சி நிலாவாக அம்மா அவர்களைக் கண்டு மகிழ்கிறோம். தமிழக மக்கள் அனைவரின் உள்ளங்களிலும் அன்பினால், பாசத்தினால், நம்பிக்கையினால் நீங்காத இடம் பெற்றுள்ள அம்மா அவர்கள், இந்தப் பதவியை எனக்கு வழங்கி, என்னையும், என் சமூகத்தையும் உயர்த்தியதாகவே நான் கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் மாண்புமிகு அம்மா அவர்களின் பின்னால் அணிவகுத்து, என்றென்றைக்கும் விசுவாசமாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே, அரியணையிலே அமர்ந்து, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஏழையெளிய மக்களின் முன்னேற்றத்திற்காக, அனைத்து மக்களின் உயர்வுக்காக, அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் செயல்பாட்டினால் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நாளை டில்லி, செங்கோட்டையிலே என் தாய் அமர்ந்து, இந்திய மக்கள் வளமுற, (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்றம் அடைய, இனிதே வாழும் வகையில் செயல்படும் நாள் வெகு தொலைவில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய மக்கள் அனைவருமே நம் தாயின் தலைமையை எதிர்நோக்கி ஆவலாகக் காத்திருக்கிறார்கள்.

சட்டப் பேரவையின் தலைவராக ஏகமனதாக என்னைத் தேர்ந்தெடுத்தமைக்காக உங்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டப் பேரவையின் மூலமாகத்தான் நம்முடைய ஜனநாயக ஆட்சி முறையை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த அவையிலே விவாதிக்கப்படும் கருத்துகள், மக்கள் மத்தியிலே அதிக



2012 அக்டோபர் 10] [பேரவைத் தலைவர்]

எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதோடு, மக்கள் மனதிலே ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள், மக்களுக்காக விவாதிக்க வந்திருக்கிறார்கள். சட்டமன்ற நடவடிக்கைகள், சீராக, செம்மையாக, அமைதியாக நடைபெறும் வகையிலும், சட்டமன்ற ஜனநாயகப் பண்புகள், நெறிமுறைகள் மற்றும் மரபுகள் பேணிக் காக்கப்படும் வகையிலும், ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ற வித்தியாசமின்றி, மக்கள் பிரச்சினைகளை எடுத்து வைக்கும் உறுப்பினர்களுக்கு வாய்ப்பளித்து, அவை நடவடிக்கைகளை நடத்த வேண்டுமென்ற கொள்கை உடையவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் கொள்கையைக் கருத்திலேகொண்டு, நடுநிலையோடு செயல்படுவேன் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பேரவையைச் சிறப்பாக நடத்துகிற குணநலன் உங்கள் அனைவரின் ஒத்துழைப்பால் எனக்குக் கிட்டும் என நம்புகிறேன்.

*முற்பகல் 11–20*

இன்றைக்கு இங்கே என்னைப் பாராட்டியிருக்கின்ற அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையிலே இப்போது நீங்கள் சொன்ன அத்தனை கருத்துகளையும் கவனத்திலே கொண்டு, மரபுகளையும், கண்ணியத்தையும் காக்கின்ற வகையிலே என்னுடைய பணிகள் சிறப்பாக இருக்குமென்ற உறுதியை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

என்மீது நம்பிக்கை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு, பேரவைத் தலைவர் பொறுப்பை ஏற்கும் நான், சிறந்த பேரவைத் தலைவராகச் செயல்பட்டு, பாரம்பரியத்தைக் கட்டிக் காப்பேன் என்ற உறுதியை என்னுடைய அன்னைக்கு உளப்பூர்வமாகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, என்னுடைய நன்றியை, என் சார்பாகவும், என்னுடைய குடும்பத்தார் சார்பாகவும் மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொண்டு, என் உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

[2012 அக்டோபர் 10

# 3. அறிவிப்புகள்

## (அ) சட்டமன்றப் பேரவை வைர விழா தேதி மாற்றம் மற்றும் வைர விழா நினைவு வளைவு அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி 1952 ஆம் ஆண்டு அமைக்கப்பெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, இவ்வருடம் 60 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளதையடுத்து, 29–10–2012 அன்று நடைபெறுவதாக இருந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா, 30–11–2012 வெள்ளிக்கிழமை அன்று காலை 10–00 மணிக்கு, சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன் தொடக்கமாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா என்றென்றும் மக்கள் நினைவில் நிற்கும் வகையில், சென்னை, இராஜாஜி சாலையில் உள்ள போர் நினைவுச் சின்னத்திற்கும், தலைமைச் செயலகத்திற்கும் இடையில், தமிழ்நாடு "சட்டமன்றப் பேரவை வைர விழா நினைவு வளைவு" ஒன்றை பிரம்மாண்டமான முறையில் அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டமைக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) என் சார்பிலும், பேரவையின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வைர விழா நினைவு வளைவிற்கான அடிக்கல்லை, 29–10–2012 திங்கட்கிழமை அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் நாட்ட இசைவு தெரிவித்துள்ளார்கள் என்பதை இந்தப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வமயம் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விழா நடைபெறும் நேரத்தில், சட்டமன்றப் பேரவைத் தலைவராகப் பணியாற்றும் பெரும் வாய்ப்பை எனக்கு அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.



2012 அக்டோபர் 10]

## (ஆ) பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைத் துணைத் தலைவர் பதவி தற்போது வெற்றிடமாக உள்ளது. இவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கான தேர்தல், 29–10–2012, திங்கட்கிழமை அன்று நடைபெறும். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 8 (1)–ன்படி, பேரவைத் துணைத் தலைவர் தேர்தலுக்கான வேட்புத் தாள்கள் 26–10–2012 அன்று நண்பகல் 12–00 மணி வரையில் சட்டமன்றப் பேரவைச் செயலாளரால் பெற்றுக்கொள்ளப்படும்.

# 4. அரசினர் தீர்மானம்

## பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெற்று ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)–ன்கீழ் பேரவை 29–10–2012 அன்று மீண்டும் கூட்டப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை இப்போது ஒத்திவைக்கப்பெற்று மீண்டும் 29–10–2012 (திங்கட்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11–24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.